பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 08 ஞாயிற்றுக்கிழமை 21.03.2021 கதிர் 136

### இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் புதிய அரசியல் கலாசாரத்துக்கு வித்திடும் ஒரு நிகழ்வு ஏற்பாடாகியிருப்பது குறித்து அறிதேன். மகிழ்ச்சி.

தமிழர் அரசியலில் இரண்டு விடயங்கள். கட்சிக்குள்ளும், தேர்தல் மூலமான பதவிகளிலும் சிலை, பல வயசு போனதுகள் பக்கம்02 »

# தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை அங்கீகரிக்கவேண்டும் ஐ.நா.

## ஜெனிவாக் கூட்டத் தொடரில் கஜேந்திரகுமார் வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை அங்கீகரிக்காமல் பேச்சளவில் மட்டும் கையாளும் வரை சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற அனைத்து மக்களும் தொடர்ந்தும் பாதிக்கப்படுபவர்களாகவே இருப்பார்கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். ☞15

## இலங்கை - பங்களாதேஷ் இடையே நேற்று 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

### இரு நாட்டு பிரதமர்கள் தலைமையில் கைச்சாத்து



இலங்கைக்கும், பங்களாதேஷுக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சு இரு நாட்டு பிரதமர்களின் தலைமையில் நேற்று டாக்கா நகரில் உள்ள பங்களாதேஷ் பிரதமரின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்தப் பேச்சின்போது பொருளாதாரம், முதலீடு, சந்தை, தொழிநுட்பம், விவசாயம், கடற்றொழில், கைத்தொழில் ☞2

## ஐ.நா. பிரேரணையை இந்தியா ஆதரிக்கும்!

### சுமந்திரன் எம்.பி. நம்பிக்கை

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் ஐ.நா. பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும் என்று நாம் வெகுவாக ☞2

## வடக்கில் மேலும் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ☞2

## அரசை இறுக்க ஊடகங்கள் முயற்சி; தக்க பாடம் புகட்ட எனக்குத் தெரியும்

### ஜனாதிபதி கோட்டா பகிரங்கமாகத் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது முறையாகப் போட்டியிட வேண்டுமா? இல்லையா? என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சில ஊடகங்கள் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்த முயல்கின்றன. ஆனால், அது என்னிடம் பலிக்காது. இவ்வாறானவர் ☞2

## பசறையில் 200 அடி பள்ளத்தில் விழுந்தது பஸ்; 14 பேர் மரணம்!

### 46 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

(விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)

தாயகம் MATRIMONY

உலகலாவிய தமிழர்களுக்கான இணையவழி வரன் தேடும் சேவை.

www.thayagammatrimony.com

பதிவு இலவசம் 0773573406



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிரந்தரமாக இடத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு பதவிக் கதிரைகளை சூடேற்றிக் கொண்டிருப்பார்கள். மக்கள் தேர்தலில் நிராகரித்து வீட்டுக்கு அனுப்பினாலும் விடமாட்டார்கள். கட்டையில் போகும் வரை அவர்களுக்கு பதவிக் கதிரை மீதான நப்பாசை போகவே போகாது. இது முதலாவது.

அடுத்தது – கட்சிக்குள்ளும் வெளியிலும் யாரும் கேள்வி கேட்கக் கூடாது. கேட்டால் கட்சிக்குள்ளிருந்தே தள்ளி வைத்துவிடுவார்கள்.

இந்தக் 'கெடு' கலாசாரத்திலிருந்து விடுபடும் போக்கு தென்படுவது சற்றுத் தெம்பு தருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஒரு கூட்டம். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நிகழ்வு.

என்ன தலைப்புத் தெரியுமா? சமகால அரசியல் தொடர்பான இளைஞர்களின் (வடலிகளின்) எதிர்பார்ப்பு'. இதுதான் தலைப்பு.

தலைவர், தொகுப்பாளர், வரவேற்பாளர் என்று எல்லாம் இளைஞர்கள். நிகழ்வில் மாறி மாறிக் கேள்விகளை அடுக்கப் போகின்ற எண்மரும் இளம் பேச்சாளர்கள்.

கேள்விச் சமருக்கான தலைப்புகள் என்ன தெரியுமா?

★ தற்கால இளைஞர்களின் அரசியல் பிரயோகமும் எதிர்நோக்கும் தடைகளும்.

★ உணர்வு ரீதியான அரசியல் செயற்பாடும் அதனை இளைஞர்கள் மத்தியில் தக்க வைத்தலும்.

★ அரசியல் அரங்கில் இளைஞர்களின் வகிபாகமும் அரசியல் பங்களிப்பும்.

★ சர்வதேச நிலைப்பாடும் இலங்கையில் அரசியல் களமும்.

– இவ்வளவு தலைப்பினாலும், இளைஞர் அணி பட்டாளத்தினாலும் கூட்டத்தில் என்ன சுவை என்று கேட்கின்றீர்களா? நியாயமான கேள்விதான்.

கூட்ட நோர்டீஸில் பதிலளிப்போர் தமிழரசின் பிரமுகர்கள் என்று போடப்பட்டிருந்தது. அதில்தான் விடயம்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் நிச்சயம் பதிலளிப்போர் பட்டியலில் உள்ளனர். சில சமயம் சிறிதரன் எம்.பியும் இணையக்கூடும்.

தமிழரசு என்றால் அதன் தலைவர் இல்லையா என்று தேடிப் பார்த்தேன். நிகழ்வை ஏற்பாடு செய்த இளையோர் பட்டாளத்துக்கும் அவரை அழைக்கும் எண்ணம் இல்லை, அவர் தரப்புக்கும் பங்குபற்றும் விருப்பம் இல்லை என்று கூறப்பட்டது.

எப்படியும் இருக்கலாம். இருந்து விட்டுப்போகட்டும். கடந்த பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட சமயம் சுன்னாகத்தில் நடந்த இது போன்ற ஒரு கூட்டம் தொடர்பில் தமிழரசுத் தலைவர் இன்னும் காய்ச்சலில் இருக்கின்றார். இதுவும் சுன்னாம் கூட்டம் போலாகி விடுமோ, அல்லது அழைத்து வைத்து வாங்கித்தள்ளி விடுவார்களோ என்ற பயமும் இருக்கலாம்.

எது,எப்படி என்றாலும், கட்சித் தலைவர்களைக் கேள்விக் கணைகளில் சிக்க வைத்துதான் அரசியல் நடத்துவது என்ற நிலைப்பாட்டுக்கு நம் இளைஞர்கள் வந்து விட்டமை நல்ல திருப்பம். நல்ல சகுனம். இன்றைய கூட்டம் மட்டுமல்ல, தமிழரின் அரசியலும் இனிக் களை கட்டும் என்று நம்பலாம்.

★ ★ ★

அதிகாரத்துக்கு வரும் ஆட்சியாளர்களின் திட்டங்கள், எதிர்பார்ப்புகள் பிசுபிசுத்துப் போகும்போது அதற்காக முதலில் குற்றவாளிகளாக்கப்படுகின்றவர்கள் அல்லது களப் பலியாகின்றவர்கள் ஊடகவியலாளர்கள்தான்.

தங்கள் தவறுகள், தோல்விகள், பின்னடைவுகள் அம்பலமாவதை எதிர்கொள்ள முடியாத அதிகாரம் மிக்க அரசியல் தலைவர்கள் அவற்றை அம்பலப்படுத்தும் ஊடகங்கள் மீதுதான் முதலில் பாய்வார்கள்; கரித்து கொட்டுவார்கள். அதுதான் நமது அனுபவப் பாடம். அரசியல் பட்டறிவு.

ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் நடாளுமன்றத் தேர்தலிலும் பெரு வெற்றியீட்டி, அதிகாரத்தைக் கைப்பற்றிய மொட்டுத் தரப்பிற்கு மக்கள் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சரியத் தொடங்கி விட்டது. மொட்டு வாடும் நிலைமை.

நேற்று நுவரெலியாவில் பேசிய அதி உத்தமர் ஊடக 'மகாராஜாக்களை' ஒரு பிடிபிடித்திருக்கின்றார். வாங்கு வாங்கென்று விளாசித் தள்ளியிருக்கின்றார்.

*"இந்தியாவில்தான் மகாராஜாக்கள் இருந்தார்கள். இங்கு இருக்கவில்லை. இங்கு சில ஊடக மகாராஜாக்கள் அப்படித் தங்களை நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஊடக சுதந்திரம் என்பது தங்களின் சுதந்திரம் என்ற எண்ணம் அவர்களுக்கு. அவர்களை எப்படி சட்டம், விதி முறைகள் படி கையாள்வது என்பது எனக்குத் தெரியும்"*– என்ற சாரப்பட அவர் முழங்கியிருக்கின்றார்.

மீண்டும் 2005 – 2014 இருண்ட யுகத்துக்கு இலங்கையில் கால்கோள் இடப்படுவதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

இன்னும் எத்தனை நிமலராஜன்களை, சுகிர்தராஜன்களை, நடேசன்களை, சிவராம்களை நாம் திரும்பவும் இழக்க வேண்டியிருக்குமோ...?

ஆண்டவன் சித்தம். பார்த்திருப்போம். எதிர்கொள்வதைத் தவிர வேறு வழி யாது...?

– மின்னல் –

## அரசை இறுக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களுக்குப் பாடம் புகட்ட எனக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்டார்.

நுவரெலியா – வலப்பனை பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் என்னை 60 மாதங்களுக்கு ஆட்சிப் பொறுப்புக்காக நியமித்துள்ளார்கள்.இப்போது 14 மாதங்கள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதே எனது தேவை.

நான் மீண்டும் ஜனாதிபதியாக வரமாட்டேன் எனப் பலர் கவலை அடைந்துள்ளனர். ஆனால், மக்கள்தான் அதனைத் தீர்மானிக்க வேண்டும்.

முதலில் 60 மாதங்களுக்கு வேலை செய்வதே எனது எதிர்பார்ப்பு. அதன் பின்னரே ஏனையவற்றை பற்றிச் சிந்திக்க முடியும்.

நான் கிராமங்களுக்கு வருவதால் தான் வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. குறுகிய வீதிகள் அமைக்கப்பட்டமையாலேயே இன்று (நேற்று) துரதிர்ஷ்டவசமாக பசறை பஸ் விபத்து இடம்பெற்றது.

ஊடக சுதந்திரம் என்பது ஊடகத்தின் உரிமையாளருக்குத் தேவையான விதத்தில் செய்திகளை வெளியிடுவது இல்லை. அவ்வாறு செய்தால் அது ஊடக மாபியாவாகக் கருதப்படும்.

இவர்கள் ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்த முயல்கின்றார்கள். என்னிடம் இது பலிக்காது. இவர்களுக்குப் பாடம் புகட்ட எனக்குத் தெரியும்.

14 மாதங்களாக நான் எந்த ஊடகத்துக்கும் அடக்குமுறைகளைப் பிரயோகிக்கவில்லை. எனினும், ஊடக சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்த முனைபவர்களுக்கு எதிராக நீதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க என்னால் முடியும்.

நாம் எப்போதும் இயற்கை சூழலை அழிக்கவில்லை. இவ்வாறான பொய்யான தகவல்களை வெளியிடுபவர்கள் யார் என எனக்குத் தெரியும். போர்க்காலத்தில் பொய்யான தகவல்களை வெளியிட்ட ஊடகங்களே இப்போதும் இவ்வாறு செயற்படுகின்றன.

கடந்த அரசில் காடுகள் அழிக்கப்பட்டன. அதனை ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை. அப்போது அவர்களுக்குத் தேவையான அரசு இருந்தது. எனவே, அவர்கள் மௌனமாக இருந்தார்கள்.

தற்போது பொய்யான தகவல்களை சமூக வலைத்தளங்களிலும் செய்திகளிலும் பரப்பி மக்களைத் திசை திருப்ப முயல்கின்றனர்.

இந்தியாவின் ஒடிசாவில் மரங்கள் வெட்டப்பட்ட காட்சிகளை ஜே.வி.பி. சுற்றுச் சூழல் ஆர்வலர்களால், இலங்கையில் இடம்பெற்றவை எனத் தவறான பிரசாரங்களை முகப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளன – என்றார்.

## இலங்கை - பங்களா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் அரசியல் உறவு ஆகியவற்றை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டன.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பங்களாதேஷ் நாட்டு பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா பாராட்டைத் தெரிவித்தார்.

நாட்டை முடக்காமல் கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்தும் நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்கும்போது வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்பது உணரப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் நாட்டு மக்களைப் பாதுகாக்க விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பங்களாதேஷ் பிரதமர் தெரிவித்தார்.

வைத்திய சேவை வழங்கல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பங்களாதேஷ் நாட்டு மக்களுக்கு நிவாரண கொடுப்பனவுகளை வழங்கும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சார்க் அமைப்பு கொரோனா அவசர நிதியத்தின் ஊடாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வைத்திய உபகரணங்களை வெகுவிரைவில் இலங்கைக்கு வழங்கும் என பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா உறுதியளித்தார்.

வலய பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் வலயத்துக்குப் பொருத்தமான பொருளாதாரத்தை மேம்படுத்தும் யோசனைகளை பங்களாதேஷ் பிரதமர் தூதுகுழுவினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்த யோசனைகள் தொடர்பில் அவதானம் செலுத்தினார்.

இலங்கை மாணவர்கள் பங்களாதேஷ் நாட்டு பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியை பயிலும் வாய்ப்பு உள்ளதாக தெரிவித்த பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா உயர்கல்வியைப் பெற்றுக்கொள்ள இலங்கை மாணவர்கள் பங்களாதேஷுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் விமான சேவையை விரிவுபடுத்தி சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளை முன்னேற்றுவது குறித்து இரு தரப்பு பேச்சின் போது கவனம் செலுத்தப்பட்டன.

விரும்பும் காலம் வரை இங்கு இருங்கள். உங்களை சிறந்த முறையில் கவனித்துக் கொள்வோம். எம்மிரு நாடுகளுக்குமிடையிலான வரலாற்று சிறப்புமிக்க உறவு அந்தளவுக்குப் பலமானது எனப் பங்களாதேஷ் பிரதமர் குறிப்பிட்டார்.

வியாபாரத்துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவது குறித்து இலங்கைத் தூதுக்குழுவினர் யோசனைகளை முன்வைத்தார்கள்.

இந்த யோசனைகளுக்கு இணக்கம் தெரிவித்த பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா பங்களாதேஷ் என்றும் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்படும் என்றார்.

அடுத்த வருடம் இலங்கைக்கு உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனாவுக்கு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை பங்களாதேஷ் பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது குடும்பத்தாரையும் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு மீண்டும் பங்களாதேஷுக்கு வருகை தருமாறு பங்களாதேஷ் பிரதமர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்தார்.

கடந்த காலங்களில் பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை சிறந்த முறையில் செயற்படுத்த ஒன்றிணைந்த ஆலோசனை ஆணைக்குழுவை மீண்டும் நடைமுறைப்படுத்துவது குறித்து இரு தரப்பு பேச்சில் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் காலநிலைக்கு பொருந்தும் வகையிலான நெற் பயிரை இலங்கைக்கு வழங்கவும், அந்நாட்டில் நன்னீர் மீன்பிடி கைத்தொழிலை மேம்படுத்த இலங்கை ஒத்துழைப்பு வழங்கவும் இரு தரப்பின் பேச்சில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு இடையில் மத்திய வங்கியின் சேவை, தொழிநுட்பத்துறை கட்டமைப்பை பரிமாற்றிக் கொள்ளல் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவின் 50ஆவது வருட ஆரம்பத்தை முன்னிட்டு இரு நாடுகளுக்கும் இடையில் விரிவுபடுத்தப்பட்ட அரசியல் உறவுகளை பலப்படுத்துவது தொடர்பிலான யோசனைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

தீவிரவாதம் மற்றும் மனித கடத்தல் வியாபாரம் ஆகியவற்றை முழுமையாக இல்லாதொழிக்க தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன.

இருதரப்பு பேச்சு நிறைவு பெற்றதன் பின்னர் இரு நாட்டு பிரதமர்களின் முன்னிலையில் இலங்கை – பங்களாதேஷ் நாடுகளுக்கிடையில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்தச் சந்திப்பின்போது இளைஞர் விவகாரத்தை அபிவிருத்தி செய்தல், விவசாயத்துறை, திறன் அபிவிருத்தி பறிமாற்றல், சுகாதார தாதிகள் சேவை பறிமாற்றம், அனைத்துலக ஒத்துழைப்பு கல்வி மற்றும் 2021 – 2025 வரையிலான அனைத்து கலாசார பறிமாற்றம் செயற்திட்டம் ஆகிய விடயங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

## வடக்கில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவரும், முல்லைத்தீவில் ஒருவரும் இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 419 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட சண்டுக்குழியைச் சேர்ந்த 37 வயது ஆணொருவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி வைத்தியசாலையில் கொரோனா அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட பெண்ணொருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தொற்றாளருடன் தொடர்புடையவர்.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் பெண்ணொருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர் ஆடைத் தொழிற்சாலை தொற்றாளருடன் தொடர்புடையவர் – என்றார்.

## ஐ.நா. பிரேரணையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நம்புகின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வாக்களிப்பதும், வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருப்பதும் இந்தியாவின் தீர்மானமாக இருந்தாலும், தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரிக்க வேண்டும் என்று இந்தியா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளதால், எமது எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்தியா கடந்த 2009, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. 2014ஆம் ஆண்டில் மட்டும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இம்முறை இந்தியா, பிரேரணைக்கு எதிராக வாக்களிக்காது என்று நாம் எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

# வெளிநாட்டிலுள்ள இலங்கையருக்கு நியாயம் கிடைக்கும்வரை போராட்டம்!



## சரத்பொன்சேகா சூளுரை

வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் இலங்கை மக்களுக்கான நியாயத்தை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் வரையில் தாம் ஓயப்போவதில்லை என்றும், அதற்காக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு –

வெளிநாடுகளில் தொழில் புரிந்து வரும் இந்நாட்டு உழைக்கும் மக்களே, நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுத்தவர்கள்.

அரசாங்கம் தற்போது அதனை மறந்து செயற்பட்டு வருகின்றது. ஆளும்தரப்பு அமைச்சர் ஒருவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் எமது மக்களை வெடிகுண்டு என்றும் தெரிவித்திருந்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கான நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்கம் எத்தகைய முயற்சியும் இதுவரையில் எடுக்கவில்லை.

தேர்தலின் போது வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக அரச மரியாதையுடன் இந்த வெளிநாட்டு பணியாளர்களை அழைத்து வந்தனர். ஆனால் தற்போது அவர்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்காது உள்ளனர்.

வெளிநாட்டுப் பணியாளர்கள் இன்று பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். அவர்களுக்கான நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் வரையில் நாங்கள் அமைதியாக இருக்கப்போவதில்லை.

இந்த இடத்தில் நாம் மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்போம். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்திலேயே நாம் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளோம். தேர்தலை நோக்காக கொண்டு அல்ல.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கூறியவை வருமாறு –

வெளிநாடுகளில் பணிபுரிந்து வரும் இந்நாட்டு தொழிலாளர்கள், இன்று தொழில் எதுவும் இன்றி பாதிப்படைந்துள்ளனர்.

அவர்களுக்கு அங்கு போதிய உணவு, நீர், மருத்துவம் என்பன கிடைப்பதில்லை. இவர்களது நிலைமை தொடர்பில் அரசாங்கத்துக்கு புரியாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள இந்நாட்டு தாய்மார்களை அழைத்து வருவதற்காக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திடம் அதற்கான வசதிகள் இல்லாவிட்டால் , வரிப் பணத்தை அல்லது வெளிநாட்டு உழைக்கு மக்களின் நிதியத்தை பயன்படுத்தியாவது அவர்களை நாட்டுக்கு அழைத்து வருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் கூறியவை வருமாறு –

கொவிட் – 19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டுக்கு திரும்ப முடியாமல் வெளிநாட்டில் தொழில் புரிந்து வரும் இந்நாட்டவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சிலர் முகாம்களிலே உயிரிழந்துள்ளனர். இன்னும் சிலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்களை அழைத்து வருவதற்கான வாய்ப்பு இருந்தும் அரசாங்கம் அதற்கான முயற்சிகளை எடுக்காமல் இருக்கின்றது. எமது நாட்டில் மாத்திரமே சொந்த நாட்டுக்கு வருவதற்காக இலஞ்சம் கொடுக்கவும், பேரணியில் நிற்கவும், போராட்டங்களில் ஈடுபடவும் வேண்டியுள்ளது.

இந்நிலையில் அவர்களிடமிருந்து மேலும் பணம் பறிப்பதை நிறுத்தி விட்டு , அவர்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். – என்றார்.

## ‘சுரகிமு கங்கா’ ஆரம்ப நிகழ்வு

இலங்கையில் ஆறுகளைப் பாதுகாப்பதற்கான தேசிய சுற்றாடல் வேலைத்திட்டமான ‘சுரகிமு கங்கா’ (ஆறுகளைக் காத்திடுவோம்) ஆரம்ப நிகழ்வு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஏற்பாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி கதிர்காமம் புனித பூமியில் மாணிக்க கங்கைக்கு அருகில் நடைபெறவுள்ளது.

இதனுடன் தொடர்புபட்ட வடமாகாண மட்ட நிகழ்வானது கிளிநொச்சி கனகராஜன் ஆற்றுப்படுக்கையின் ‘ரை ஆறு’ பகுதியில் அன்றைய தினம் நடத்துவதற்கு மத்திய அதிகார சபையினால் ஒழுங்குகள் மேற்கெள்ளப்பட்டுள்ளன.

## போதைப்பொருள் வியாபாரத்தில் முரண்பாடு: 19 வயது இளைஞன் தாக்கப்பட்டுக் கொலை!

கொழும்பு – கிரேண்ட்பாஸ் பகுதியில் போதைப் பொருள் விவகாரம் தொடர்பில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக, கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவலோக்க விளையாட்டு மைதானத்துக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில், ஐஸ் போதைப் பொருளை விலைக்கு பெற்றுக் கொள்வது தொடர்பில் உயிரிழந்த இளைஞனுக்கும், சந்தேக நபருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்த இருவருக்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. பின்னர் சந்தேக நபர் உயிரிழந்த இளைஞனின் கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளமையுடன், படுகாயமடைந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

சேதவத்த – வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கிரேண்ட்பாஸ் பொலிஸார் மேற்படி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

மோதலின் போது சந்தேக நபரும் காயமடைந்துள்ளமையுடன், அவர் தற்போது பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## ஜனிவாவிலிருந்து மீள்வதற்கான ஒரேவழி மனித உரிமைகளைப் பாதுகாப்பதே ஆகும்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் பட்சத்தில் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தணியும். கோட்டாபய ராஜபக்ஷவால் அதனை செய்ய முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

இலங்கைக்கு சர்வதேச தொடர்புகள் அத்தியாவசியமானவையாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இனவாதம் , மதவாதத்தின் அடிப்படையில் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கின்றார். அதற்காக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு செயற்படும் அரசாங்கம் ஜெனிவா இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக மக்களிடம் போலி பிரசாரங்களை முன்னெடுக்கிறது. எனவே, மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை வெற்றி கொள்ள முடியும். ஜெனிவா நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்குக் காணப்படும் ஒரேயொரு வழி மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகும்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் ஜெனிவாவில் சார்பான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ள போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அதனைச் செய்ய முடியாது. நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறி ஆட்சியை கைப்பற்றிய ஜனாதிபதி தற்போது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையைப் பாதுகாக்கத் தவறியுள்ளார். – என்றார்.

## தவக்காலச் சிந்தனை



### முடிந்த உதவிகளை முடியும் வரை செய்வோம்

தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவார். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தம்மை உரியவர் ஆக்குவார். (யோவான் 20:25) மனிதரைத் தவிர, மற்றவைகள் எல்லாம் தமக்கென்று வாழ்வதில்லை. மனிதனே அவற்றின் பலன்களை அனுபவிக்கின்றான். மனிதன் தன்னையும் தன் சார்ந்த குடும்பத்தையும் கருதியே சுய நலமாகச் செயற்படுகின்றான். தன்னை பிற எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ளவே முற்படுகின்றான். இயேசுவின் வார்த்தையோ வேறு விதமாக இருக்கின்றது.

இவ்வுலகத்திலே உயிரை நிரந்தரமாகக் காத்துக் கொள்ள முடியாது. குறிப்பிட்ட காலங்களின் பின் எல்லோரும் இறப்பை அடைந்தே தீருவார்கள். அந்தக் கொஞ்சக் காலத்திலும் பிறருக்கு நன்மை, உதவி செய்கின்றவர்களாக வாழ்வதன் மூலம் நிலைவாழ்வு என்று சொல்லப்படுகின்ற இறப்புக்கு பின்னான புதுவாழ்வுக்கு தகுதி உடையவராகின்றார்கள் என்பதை இயேசு குறிப்பிடுகின்றார்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் ஆட்டம் பாட்டம், உண்போம் குடிப்போம், இன்பத்தை அனுபவிப்போம். நன்மை தீமை என்று ஏதும் உண்டா? உயிர்போனால் எல்லாம் போச்சு என்ற தப்பான கண்ணோட்டத்தில் உள்ளவர்களே அனேகம் பேராக இருக்கின்றார்கள். இவர்களுக்கு நெஞ்சிலே ஈரமில்லை, நினைவெல்லாம் சுயநலமே

காக்கை, குருவி, விலங்குகள் எல்லாம் தன் இனத்தை நேசிக்கின்றன. நன்மை, தீமை தெரிந்த மனிதனோ அடுத்தவர்க்கு கொடுப்பதை இழப்பென்று கருதுகின்றான். மற்றவற்றின் இழப்பில் தான் நாம் வாழுகின்றோம். நம்மைத் தியாகம் செய்வது ஏன்? மற்றவர்களும் வாழ உதவ முடியாது.

கண்கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம் செய்து கண்ணின் பயனை அடைந்து கொள்ள முடியாது. நம்முடைய இயலாமையிலே பிறர் உதவியை நாடும்போது பயன் கிடைக்காமல் போகலாம். என்னாலே இன்னொருவன் வாழ உதவினேன் என்ற மன நிறைவே போதுமானதாகும். நம்மிலும் வசதி குறைந்தவர்களுக்கு எதிர்பாராமல் கொடுக்கும் போதே அது கைமாறு கருதாத உதவியாகும். நாம் கூறும் ஆறுதல் எம்முடைய உடனிருப்பு, எம்முடைய பொருளுதவி எம்முடைய தான தருமங்கள் இவைகளால் நம்மையும் அறியாமலே நாமும் நிலைவாழ்வுக்குத் தகுதி உள்ளவர்கள் ஆகின்றோம். முடிந்த உதவிகளை முடியும் வரை செய்வோம். தானம் உயிர்காக்கும்.

- அன்ரனி பீற்றர் அபீர்ராஜன்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பிரிட்டனின் முன்மாதிரி

இலங்கைக்கு எதிராக 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான திட்டம்' என்ற பெயரில் மேற்கு நாடுகள் சேர்ந்து ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பித்துள்ள பிரேரணை நாளை மறுதினம் பெரும்பான்மையுடன் தீர்மானமாக நிறைவேறுவது பெரும்பாலும் உறுதி.

அப்படி நிறைவேறுவதுடன் விடயம் அடங்கி விடாது. முன்னைய தீர்மானங்கள் போல இது கிணற்றில் வீழ்ந்த கல்லாக அடங்கி விடாது என்பதும் பெரும்பாலும் உறுதி.

ஜெனிவாவில் கடைசியாக இலங்கை தொடர்பாக நிறைவேறிய 30/01, 34/01, 40/01 தீர்மானங்கள் வேறு, இப்போது நிறைவேற்றப்படப் போகின்ற 46/01 தீர்மானம் வேறு.

அந்த மூன்றும் இலங்கையின் பங்களிப்புடன் – அதன் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டன.

இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது இலங்கையின் எதிர்ப்பு, ஆட்சேபனையுடன் நிறைவேற்றப்படப் போகின்றது.

அந்த மூன்றும் – வாக்கெடுப்பு ஏதுமின்றி – ஏகமனதாக, அங்கத்துவ நாடுகள் அனைத்தினதும் இணக்கத்துடன் நிறைவேற்றப்பட்டன.

இப்போது, இலங்கையும் அது சார்ந்த நாடுகளும் கடும் எதிர்ப்பைக் காட்ட, அங்கத்துவ நாடுகள் இடையே வாக்கெடுப்பு நடத்தியே இது நிறைவேற்றப்படப் போகின்றது.

அந்த மூன்று தீர்மானங்களும் சில விடயங்களை – பொறுப்புகளை – கடப்பாடுகளை – நிறைவேற்றுமாறு இலங்கையைக் கோரின. அதற்கு சம்மதம் தெரிவித்து அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்ற உறுதியளித்து, அந்தக் கடப்பாடுகளைச் செய்யப் போவதாகத் தெரிவித்து அதை ஏற்று நின்றது இலங்கை.

சர்வதேச மன்றில் பொறுப்புக்களை, கடப்பாட்டை இலங்கை முரண்படாமல் ஏற்று நின்றமையால் அதற்குக் கால அவகாம் அளித்து – வாய்ப்புக் கொடுத்து – சந்தர்ப்பம் வழங்கி – பார்த்திருந்தது சர்வதேச சமூகம்.

ஆனால், இம்முறை நிலைமை அதுவல்ல. இலங்கை செய்ய வேண்டியவை – நிறைவேற்றக் கடப்பாடுடையவை – யாவை என்பதை மேற்கு நாடுகள் சமர்ப்பித்துள்ள இந்தப் பிரேரணை வரிசைப்படுத்தியுள்ளது. அவற்றை நிறைவேற்றுமாறு – ஆற்றுமாறு – பிரேரணை வலியுறுத்தி நிற்கின்றது. ஆனால் அவற்றைப் பொறுப்பேற்க மறுத்து, அந்தப் பிரேரணையை நிராகரித்து, எதிர்த்து நிற்கின்றது இலங்கை.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தங்களின் இணக்கமின்றி, பிற நாடுகளினால் திணிக்கப்படும் எந்தப் பிரேரணையும் – எந்தத் தீர்மானமும் – தங்களைக் கட்டுப்படுத்தாது, அத்தகைய தீர்மானங்களுக்குக் கட்டுப்பட மாட்டோம் என்று கொழும்பும் பகிரங்கமாக அறிவித்து விட்டது.

இந்தப் பின்புலச் சூழலில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் தீர்மானத்தை வெறுமனே நிறைவேற்றி விட்டு, அதில் உள்ள விடயங்களை இலங்கை தானாகவே நிறைவேற்றிச் செயற்படுத்தும் என்று பார்த்திருப்பதற்கு – கனவு காண்பதற்கு – மேற்குலகம் உட்பட்ட சர்வதேச நாடுகள் அப்படி ஒன்றும் அறிவற்ற தரப்புகள் அல்ல.

ஆகவே, இந்தத் தடவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும், அதில் உள்ளவற்றை நோக்கி கொழும்பை நகர்த்தச் செய்வதற்கான பிரதிபலிப்பு நடவடிக்கைகளும் மேற்குலக நாடுகளால் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான –கடுமையான வாசகங்கள், கடப்பாடுகள் அமைந்த – தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிவிட்டு அப்படியே சர்வதேச சமூகம் அடங்கிவிடாது.

சர்வதேச நாடுகளின் அடுத்த கட்ட நடவடிக்கை எப்படியானதாக – எத்தகையதாக – அமையும் என்பதை பிரித்தானிய அமைச்சர் நைஜல் அடம்ஸ் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கோடி காட்டியிருக்கின்றார்.

*"பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியன நிகழ்ச்சி நிரலில் மிகவும் முக்கியம் வாய்ந்த விடயங்களாக காணப்பட வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொறுப்புக் கூறல் மிகவும் அவசியமானதொன்றாகும்.*

*"உலக நாடுகளில் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சில தடைகளை விதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மேலும் பலருக்குத் தடைகளை விதிப்பது தொடர்பில் ஆராய்ந்த வருகின்றோம்.*

*"இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்காக பிரிட்டனில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் முன்மொழிவுகளையும் நாங்கள் ஆதரிக்கின்றோம்."* – என்று பிரிட்டிஷ் அமைச்சர் கூறியிருக்கின்றார்.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை அடுத்து, சொத்து முடக்கம், பயணத்தடை என்று இலங்கைப் படைத் தரப்பினருக்கு எதிராகப் பல நாடுகளில் அதிரடி அறிவிப்புகள் காத்திருக்கின்ற என்று நம்பலாம்.

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் குருதிக்கொடை முகாம் நேற்று







தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நேற்று சனிக்கிழமை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ரூபிகா சேயோன் அவர்களின் தலைமையில் இரத்தவங்கிப் பிரிவினர் கலந்துகொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மகேசன் கஜேந்திரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், அவசர தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்குக் குருதிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இரத்தம் வழங்கி உதவுமாறும் இரத்த வங்கி அவசர கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. அரசியற் கட்சிகளுக்கு அரசியற் செயற்பாடுகளில் மாத்திரம் ஈடுபடாமல் சமூகத்தின் ஏனைய விடயங்களிலும் பங்கேற்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே குருதிக்கொடை முகாமை ஏற்பாடு செய்திருந்தோம். ஆர்வத்துடன் அனேகர் கலந்து கொண்டு இரத்தம் வழங்கியிருந்தார்கள். ஆனால், இவர்களிற் பலர் ஏற்கனவே குருதிக்கொடையில் ஈடுபட்ட வர்கள். குருதிக்கொடை தொடர்பாகத் போதிய விழிப்புணர்வு இல்லாததன் காரணமாக புதிதாகக் குருதியை வழங்க வருகின்றனவர் களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது என்று தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் –

ஒருவர் ஒருதடவை வழங்கும் 1பைந்து இரத்தம் 3 உயிர்களைக் காப்பாற்றக்கூடியது. உயிர் காக்கும் இந்த உன்னத பணி குருதியைக் கொடையாக வழங்குபவர்களுக்கும் பல்வேறு நன்மையைத் தரக்கூடியது. இது தொடர்பாக விழிப்புணர்வைச் சமூகத்தில் நாம் ஏற்படுத்த வேண்டும். இந்த முகாம்கள் அதற்கு வழிசமைக்கும். தொடர்ந்தும் பல்வேறு இடங்களிலும் இதுபோன்ற முகாம்களைச் செய்ய வுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

குருதிக்கொடை முகாமில் பங்குகொண்ட அனைவருக்கும் செவ்விரத்தம் பூச்செடிகள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மோட்டார்க் குண்டு வெடித்தது திருமலையில் குடும்பஸ்தர் பலி!

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனன்வெளிப் பகுதியில் 81 ரக மோட்டார் குண்டு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாகவும், சடலம் சேருநுவர பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் வைத்திருந்த மோட்டார் குண்டை கிரைண்டர் மெசின் மூலமாக அறுத்து மருந்துகளை எடுக்க முற்பட்டபோதே குண்டு வெடித்து அவர் உயிரிழந்ததார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் சீனன்வெளி பகுதியைச் சேர்ந்த அல்லிமுத்து ஜெகன் எனும் 45 வயதுடைய குடும்பஸ்தர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்படதாகவும் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனார் எனவும் தெரிவித்துள்ளனர்.

## மூக்குக் கண்ணாடிகள் இன்று வழங்கல்

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் சுதுமலை அம்மன் அறக்கட்டளை நிதியமும் இணைந்து கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் 'கண்ணுக்கு முதலிடம் அளிக்கும் சேவை' இன்று காலை 7 மணி முதல் சுதுமலை கிராம அபிவிருத்தி மண்டபத்தில் (சுதுமலை அம்மன் கோவிலடி) நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சுதுமலை, மானிப்பாயை அண்டிய வசதி குறைந்த நலிவுற்ற மக்களுக்கு தகுதி வாய்ந்த கண் பார்வை பரிசோதகர்களால் பரிசோதித்து வாசிப்புக்குரிய மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். இந்நிகழ்வுக்கு வருகை தரும் அனைவரும் சுகாதார விதிமுறைகளைப் பேணி கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## புனர்வாழ்வளித்தல் தொடர்பான வர்த்தமானி குறித்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அறிக்கை!

அரசாங்கத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட புனர்வாழ்வளித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன, மத ரீதியான சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வலுவிழக்கச் செய்யும் வகையில் அமைந்திருப்பதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

ஒவ்வொரு பிரஜையினதும், குறிப்பாக இன,மத ரீதியான சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வலுவிழக்கச்செய்யும் வகையிலேயே மேற்படி வழிகாட்டல்கள் அமைந்துள்ளன. அத்தோடு மேற்படி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் ஊடாக நீதித்துறையின் அதிகாரங்கள் சில நிறைவேற்றதிகாரத்திடம் கையளிக்கப்படல் உள்ளடங்கலாக அதிகாரங்களை வழங்குவதில் மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அத்தோடு மிகவும் மோசமான பயங்கரவாதத்தடைச்சட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் அதற்கான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கும் எடுக்கப்படும் முயற்சிகள் இலங்கையின் அரசமைப்பிற்கு முரணானதாகும். மேலும் இந்த வழிகாட்டல்கள் சிவில் சமூகத்தின் சுதந்திரத்தின் மீதும் சட்டத்தின் ஆட்சி மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதேவேளை இந்த மேலோட்டமான வழிகாட்டல்கள் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் அபாயத்தைக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக 'புனர்வாழ்வளித்தல்' என்பதால் கருதப்படுவது என்ன என்பது தொடர்பாக இங்கு தெளிவாக விளக்கமளிக்கப்படவில்லை. அதேபோன்று புனர்வாழ்வளிக்கும் நிலையங்களினால் எத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்படவில்லை.

LANKA BELL



The truly Sri Lankan telecommunication company

## வேலை வாய்ப்பு / VACANCIES

லங்கா பெல் இலங்கையின் வர்த்தக மற்றும் வீடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு முழு அளவிலான தொலைத் தொடர்பு சேவைகளை வழங்கும் உலகத் தரம் வாய்ந்த தொலைத்தொடர்பு சேவை நிறுவனமாகும்.

இலங்கைத் தீவு முழுவதும் எங்கள் சந்தை தொடர்ந்து பெரும் சாதகமான நிலையில் நேர்த்தியாக வளர்ச்சி கண்டு வருகையில் துடிப்பான வலுமைமிக்க, ஆளுமையும் ஆற்றலும் கொண்டவர்களைத் தேடி இணைத்து, எமதுநிறுவனத்தை மேலும் வளர்த்தெடுக்கக்கூடிய நபர்களை பணியாளர்களாகத் தேடுகின்றோம்.

**முகாமையாளர்/உதவி முகாமையாளர் – வாடிக்கையாளர் செயல்பாடுகள் (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி)**
**Managers / Assistant Managers –Customer Operations (Jaffna, Mullaitivu, Killinochi)**

**Job Responsibility**

- Plan and set objectives for the financial year
- Identify and set objectives in areas for improvement
- Plan and implement strategies to increase the residential revenues and the line count.
- Plan and implement strategies to maintain and increase the overall service levels.
- Coordinate with other divisions to review and implement new initiatives
- Authorize sales and after sales services
- Maintain and increase Pre paid card and other means of revenues from business offices.
- Comply within the boundaries of the business office budget
- Recommend user friendly system programs by collaborating with IT
- Maintain Customer Care Standards for walk-in customers
- Maintain branch offices brand visibility, cleanliness including reporting staff
- Maintain required stocks to repair and sell for walk-in customers and distribute to Field staff reporting to branches
- Up-sell and Cross-sell products to walk-in customers including Bell Store , Other Operator services / products
- Handle, monitor, supervise BO petty cash float, daily cashiering activities, BO stock and perform regular self audits followed by submitting reports to superiors
- Monitor daily operations, administration & maintenance activities and stock requirements of BOs.
- Handle petty cash float.

**Field related work**

- Responsible for all field staff involved in technical repairs, prepaid card sales and sales of other services and products
- Drive the field operation independently with minimum supervision
- Provide guidance, training and motivation to subordinates to ensure consistent achievement of predefined KPI targets
- Carryout field work with subordinates to achieve company sales, revenue and service targets
- Maintain good relationship and coordinate across all departments to ensure client satisfaction is achieve
- Ensure organizational products, solutions and services consistently exceed/meet client requirements/ expectations
- Identify untapped profitable market segments, suggest and implement plans to timely capture business
- Ensure prepaid card availability in relevant areas
- Recovery of units
- Adherence to the code of conduct /security /safety standards of Lanka Bell group
- Carry out regular field inspection visits

**Administration work**

- Identify strengths and weaknesses of the staff and recommend training and development programs.
- Monitor and review existing policies, initiate and recommend suitable changes.
- Maintain a healthy employee morale without discrimination
- Review staff performance, rotation and recruitment
- Monitor daily operations, administration & maintenance activities
- Prepare management reports
- Verify staff attendance, Leave, meal claims , OT, OPA and transport claims etc. to process payments
- Any other duties assigned by the management from time to time.
- Co-ordinate with other departments on operational matters.
- Conduct job related training as and when required.

**தகுதி, அனுபவம் மற்றும் திறன்**

1. கிளை நடவடிக்கைகள் அல்லது விற்பனைத் துறையில் குறைந்தது மூன்று வருட அனுபவம்.
2. ஜி.சீ.ஏ.எல். சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்கு ஈடான எந்தவொரு கல்வித் தகைமையும்.
3. நல்ல தொடர்பாடல் மற்றும் ஆட்தொடர்புத் திறன்.
4. எண்சார்ந்த மற்றும் ஆய்வு செய்யக்கூடிய திறமை
5. பார்ப்பதற்கு சிறந்த தோற்றமுடையவராகவும் நேர்த்தியான அலங்காரமுள்ளவராகவும் இருத்தல்.
6. ஊக்கமிக்கவராகவும் செயல்திறன் மிக்கவராகவும் இருத்தல்

**மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.**

இந்தத் தேவைகள், தகைமைகள் உங்களுக்குப் பொருந்திவரும் என்று நம்பினால் உங்கள் சுயவிவரக் கோவையை handy@mail.lankabell.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 7 நாட்களுக்குள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைக்கவும்.

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை மின்னஞ்சலின் subject பகுதியில் மறக்காமல் குறிப்பிடவும்.

**முகாமையாளர் - மனித வளப் பிரிவு**
**லங்கா பெல் தனியார் நிறுவனம்**
**344, காலி வீதி, கொழும்பு 03**

# வெளிநாட்டு கடனை மீளசெலுத்த நிதி அரசாங்கத்திடம் இல்லை!

## ஹர்ஷ டி சில்வா கூறுகின்றார்



அரசாங்கத்திடம் எதிர்வரும் மாதங்களில் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டுக் கடன்களை மீள செலுத்துவதற்கான நிதி இல்லை. அத்தோடு தனியார் துறை மற்றும் வங்கிகள் மீள செலுத்த வேண்டிய கடன் தொகை அரசாங்கத்தால் செலுத்தப்படவுள்ள கடன் தொகையை விட பன்மடங்கு அதிகமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்–

தற்போது அமெரிக்க டொலரின் பெறுமதி 203.15 ரூபாவாகும். இந்நிலையில் எதிர்வரும் மாதங்களில் மீள செலுத்த வேண்டிய கடனுக்காக டொலர்கள் அரசாங்கத்திடமில்லை.

சீனாவிடமிருந்து கிடைக்கப் பெறவுள்ள தாகக்கூறிய 150 கோடியும் கிடைக்கப்பெறாமல் போயுள்ளது. அவ்வாறு கிடைத்தால் அதனை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் உத்தியோகபூர்வமாக அறி விக்க வேண்டும்.

அரச கடன் தவிர தனியார் துறையினரும், வங்கிகளும் செலுத்த வேண்டிய கடன்களும் உள்ளன. இவை இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களை விட அதிகமானதாகும்.

இது இவ்வாறிருக்க சீனாவிடமிருந்து யுவான்களில் நிதியுதவி கிடைக்கவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கிடைத்தாலும் அது டொலர்களில் நாம் மீள செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைக்கு போதுமான தொகையாகக் காணப்படாது. – என்றார்.

# நாடுமுழுவதிலும் முன்னறிவிப்பின்றி இராணுவம் களமிறங்கிச் சோதனை!

## சரத் வீரசேகர எச்சரிக்கை



நாட்டில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸாரின் தலைமையில் இராணுவத்தினரால் விசேட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் குற்றவாளிகள் தலைமறைவாக இருக்கின்றனர் என நம்பப் படும் நிலையில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பான திகதி அறிவிக்கப்பட்டால் குற்றவாளிகள் தலைமறைவாக வாய்ப்பாகிவிடும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே பகல் மற்றும் இரவு வேளைகளில் குறித்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

# மேல்மாகாணத்தில் நேற்று விசேட சுற்றிவளைப்புகள்!

மேல் மாகாணத்தில் நேற்று(சனிக் கிழமை) விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குற்றச் செயல்களை கட்டுப்படும் நோக்கிலேயே இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் பொலிஸார், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து செயற்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்கும் கவசமே காடுகள் அதைப் பாதுகாப்போம்




பிரணவிகா உதயராசா
(தரம் 10, யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

காடுகள் எனப்படுபவை மரங்களால் சூழப்பட்ட பகுதி ஆகும். உலக நிலப்பரப்பில் உள்ள காடுகள் மத்திய கோட்டுப் பகுதியிலிருந்து முனைவுப் பகுதிகள் வரை பரவியுள்ளன. மேலும் மரங்கள் அடர்ந்த நிலப்பகுதி காடுகள் என்று அழைக்கப்படும்.

புவிமேற்பரப்பின் 9.5 வீதம் அல்லது மொத்த நிலப்பரப்பில் 30 வீதம் காடுகளினால் மூடப்பட்டுள்ளது. முற்காலத்தில் காடுகள் நிலப்பரப்பில் 50 வீதம் வரை மூடியிருந்ததாக மதிப்பிட்டுள்ளனர். பூமியின் உயிர்த்தொகுதியில் 80 வீதத்தை காடுகள் கொண்டிருக்கின்றன.

உலகளாவிய ரீதியில் காடுகளை ஏழு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. அயன மழைக் காடுகள் (தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா, பசுபிக் சமுத்திரத் தீவுகள்)
2. இடைவெப்ப வலயக் காடுகள் (வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதி, ஐரோப்பின் வடக்குப் பகுதி மற்றும் மத்திய பகுதி, ஆசியாவின் கிழக்குப் பகுதி (கொரியா, ஐப்பான், கிழக்குச் சீனா) ஆஸ்திரேலியாவின் கிழக்கு மற்றும் தென் கரையோரப்பகுதி, தென்னமெரிக்காவின் மேற்கு கரையோரத்தை அண்டிய பகுதி)
3. மத்திய தரைக்காடுகள்
4. தைக்காக் காடுகள்
5. துந்திராக் காடுகள்
6. புல் நிலங்களும், சவன்னாக்களும்
7. பாலைவனங்கள்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மார்ச் 21ஆம் திகதியை 2012ஆம் ஆண்டு சர்வதேச வன தினமாக அறிவித்துள்ளது. இந்த நாள் அனைத்து வகையான காடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை (theme) மையப்படுத்தி உலகளாவிய ரீதியில் சர்வதேச வனதினம் கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டிற்குரிய (2021) கருப்பொருளாக 'வன மறுசீரமைப்பு: மீட்பு மற்றும் நல்வாழ்விற்கான பாதை' ("forests restoration: a path to recovery and well-being") என்பதாகும். காடுகளின் மறுசீரமைப்பு மற்றும் நிலைத்து நிற்கும் முகாமைத்துவம் ஆகியன காலநிலை மாற்றம் மற்றும் உயிர்ப் பல்வகைமை ஆகியவற்றிலுள்ள நெருக்கடிகளைத் தீர்க்க உதவுகின்றன.

### காடுகளின் நன்மைகள்

* காடுகள் அதிகளவில் உயிர்ப்பல்வகைமை கொண்டதாக காணப்படுவதுடன் வாழ்வதற்கு உகந்த சூழலை உருவாக்குவதில் மிகமுக்கிய பங்கினையும் வகிக்கின்றன.
* உலகில் உள்ள கால்நடைகள் தமது தீவனத்திற்கு காடுகளையே நம்பியுள்ளன.
* பெரும்பலான தொழிற்சாலைகள் காடுகளையே நம்பியுள்ளன.

1. காகிதம் – மூங்கில், தைலமரம்
2. ரேயான் – தைலமரம்
3. மரப்பொம்மைகள் – மஞ்சக்கடம்பு, செஞ்சந்தனம்
4. தீக்குச்சி – அயிலை, முள், இலவு
5. பஞ்சு – இலவம்மரம்
6. வாசனை எண்ணெய் – சந்தனமரம்
7. தைல எண்ணை சோப்பு – வேம்பு, புங்கம் இலுப்பை

* காபனீரொட்சைட்டின் அளவைக் குறைத்து ஒட்சிசன் அளவை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.
* ஆவியுயிர்ப்புத் தொழிற்பாட்டின் மூலம் வளிமண்டலத்தில் நீராவியின் செறிவை அதிகரிக்கச் செய்வதுடன், உயர்ந்த காடுகள் காற்றுகளை தடுத்து மழைவீழ்ச்சியை கொடுக்கின்றன.
* காடுகள் எரிபொருள்களும், தளபாடங்களுக்குமுரிய மூலப்பொருட்களாகவும் பயன்படுவதுடன் மருந்துகளுக்காகவும் பயன்படுகின்றன.
* தாவரப்போர்வை மிகுந்த பகுதிகளில் காற்றின் வேகத்தை கட்டுப்படுத்துகின்றது.
* காடுகள் மண்ணரிப்பு, மண்வறட்சி, மண்சரிவு போன்றவற்றினை குறைவடையச் செய்து மண்ணை பாதுகாக்கின்றன.
* மழை நீர் பெருமளவு கழிவுநீரோட்டமாக செல்வதனைப் பாதுகாத்து தரைக்கீழ் நீராக செல்வதற்கு தாவரங்கள் துணைபுரிகின்றன.
* நதிகளுக்கு அருகில் மரங்கள் காணப்படுவதனால் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதுடன் நீரானது வேகமாக பாய்ந்து நதிக்கரையோரத்தை அரிப்பிற்குள்ளாக்காது பாதுகாக்கின்றன.



### காடழிப்பிற்கான காரணங்கள்

1. இன்றைய உலகில் சனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப அவர்களின் தேவைகளும் அதிகரிக்கின்றன. அதனால் காடுகள் அழிக்கப்பட்டு குடியிருப்பு நிலங்களாக மாற்றப்படுகின்றன. அது மட்டுமன்றி போக்குவரத்து பாதைகள் அமைப்பதற்காகவும், அகலப்படுத்துவதற்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன.
2. உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவையும், வர்த்தக விருத்தியும் ஏற்பட்ட காரணத்தினால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் பெருமளவில் அதிக நிலப்பரப்பில் மேற்கொள்ள வேண்டிய தேவை
3. மரப்பலகைகள், மரக்குற்றிகள், மரக்கூழ், கடதாசி போன்ற காட்டு உற்பத்திகளின் அளவு அதிகரிப்பதனால் காடுகள் அழிக்கப்படுவதுடன் பெருமளவில் வைரமான மரங்களான முதிரை, தேக்கு, பாலை முதலியவை பலகைகள், தளபாடங்கள் போன்றவற்றிற்காக அழிக்கப்படுகின்றன.
4. இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுகின்ற காட்டுத்தீயினால் காடுகள் அழிவடைகின்றன.
5. இரத்தினக்கல் அகழ்வு, காரிய அகழ்வு, இரும்பு அகழ்வு முதலிய நடவடிக்கைகளினாலும் காடுகள் அழிவடைகின்றன.
6. விறகுகளை எடுத்தல், இலாபமீட்டும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் மரங்களை எடுத்தல் போன்றவற்றினாலும் காடுகள் அழிவடைகின்றன.
7. யுத்த நடவடிக்கைகளினாலும் காடுகள் அழிவடைகின்றன.

### காடழிப்பதனால் ஏற்படும் விளைவுகள்

* பிரதேசங்களில் மழைவீழ்ச்சி நீடிப்பதும், குறைவடைவதும் காடுகளிலேயே தங்கியுள்ளது.
* தாவரங்கள் நிலப்பரப்பில் ஒரு போர்வையாக காணப்படுவதனால் மழைவீழ்ச்சியானது நேரடியாக விழுவதினை தடுக்கின்றன. அத்துடன் தாவர வேர்கள் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் மண் அரிக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கின்றன.
* புவி வெப்பமடைவதில் பச்சைவீட்டு வாயுக்கள் முக்கியம் பெறுகின்றன. பச்சை வீட்டு வாயுக்களில் காபனீரொட்சைட் வாயு மிக முக்கியமானது. காடுகள் அழிக்கப்படுகின்ற போது காபனீரொட்சைட்டை உறிஞ்சும் செயற்பாடு குறைவடைந்து வளிமண்டல சமநிலை பாதிப்படைந்து புவிவெப்பம் அதிகரிக்கும்.
* காடுகள் அழிக்கப்படும் பிரதேசத்தில் நேரடியாக ஆவியாக்கம் இடம் பெறுவதனால் குறிப்பிட்ட பிரதேசத்தில் வறட்சி நிலை உருவாகும்.
* உற்பத்தியாக்கிகளான தாவரங்கள் அழிவடைவதனால் அதனில் தங்கியுள்ள விலங்குகள் அழிவடைந்து உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது.
* மண்ணின் ஈரத்தன்மை குறைவடைதல்.
* காற்றின் வேகம் அதிகரித்தல்.
* வெள்ளப் பெருக்கு ஏற்படல்.

### காட்டுவளத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள்

1. மழைக் காடுகளைப் பேணிப் பாதுகாப்பதற்கான கொள்கைகள், சட்டங்கள் முதலான நடைமுறைச் செயற்பாடுகளை சரியான முறையில் முன்னெடுக்க வேண்டும்.
2. காடுகளின் பயன்பாடு, அவற்றின் முக்கியத்துவம் என்பவற்றை மக்கள் மத்தியில் எடுத்துரைப்பதுடன் காட்டுவளங்களின் பரப்பளவு குறைவடைகின்ற போது எதிர் நோக்கும் பிரச்சினைகளை தெளிவாக எடுத்துரைத்தல்.
3. மீள்காடாக்கம் செய்வதன் மூலம் காட்டுவளத்தை அழிவிலிருந்து ஓரளவு மீட்கக் கூடியதாக இருக்கும்.
4. வறிய நாடுகளில் பெரும்பாலும் விறகுகளையே எரிபொருளாகப் பயன்படுத்துகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக விறகுகளிற்குப் பதிலாக வேறு சூழலிற்குச் சார்பான எரிபொருளைப் பயன்படுத்துவதன் மூலம் விறகிற்காக அழிக்கப்படும் காடுகளைப் பாதுகாக்க முடியும்.

> காடுகளைக் காப்பாற்றுவதன் மூலமாகத் தான் நாம் வெப்பத்தைக் குறைத்து, வெப்ப உயர்வினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து உயிர்களையும், பயிர்களையும் காப்பாற்ற முடியும். மார்ச் 21ஆம் திகதியான இன்று காடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உலக காடுகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. பூமியையும், இயற்கைச் சமநிலையையும் பாதுகாக்கும் கவசமே காடுகள். எனவே அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாதுகாக்க முற்படுவோமாக.

5. வறிய நாடுகளில் தொழில் வாய்ப்பு இன்மையால் வருமானத்திற்காக சட்டவிரோதமான முறையில் மரங்களை எடுத்தல், விறகு சேகரித்தல் முதலிய தொழில்களில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதன் மூலம் இவ்வாறு அழிக்கப்படும் காடுகளைப் பாதுகாக்க முடியும்.



6. சூழலின் தாங்குதிறனை தாண்டக் கூடிய வகையில் மந்தைகள் மேய்ப்பதனை தடை செய்ய வேண்டும்.
7. காட்டுத்தீ பரவுவதனை முறையாக செய்மதிகள் மூலம் கண்காணித்து அதனை மிக வேகமாகவும், காடுகளிற்கு அதிக சேதத்தை ஏற்படுத்தாத வண்ணமும் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
8. சனத்தொகை அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற காடழிப்பைத் தடுப்பதற்கு அரசினால் முறையாகத் திட்டமிடப்பட்ட குடியேற்றத் திட்டங்களை காடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைத்தல் வேண்டும்.
9. கரையோர கண்டல் தாவரங்களைப் பாதுகாத்தல்.

### முடிவுரை

இந்தக் காடுகளைக் காப்பாற்றுவதன் மூலமாகத் தான் நாம் வெப்பத்தைக் குறைத்து, வெப்ப உயர்வினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து உயிர்களையும், பயிர்களையும் காப்பாற்ற முடியும். மார்ச் 21ஆம் திகதியான இன்று காடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உலக காடுகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. பூமியையும், இயற்கைச் சமநிலையையும் பாதுகாக்கும் கவசமே காடுகள். எனவே அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாதுகாக்க முற்படுவோமாக.



# வாழ்க்கைப் பாடத்தைப் போதிக்கும்

## நான்கு குட்டிக் கதைகள்

**முதல் கதை -**

24 வயது வாலிபன் ரயில் ஜன்னல் வழியே பார்த்து கத்தினான்.

அப்பா இங்கே பாருங்கள்....மரங்கள் எல்லாம் நமக்கு பின்னால் ஓடுகின்றன என்று!

அவனருகில் இருந்த அவனது அப்பா சிரித்துக்கொண்டார்.

ஆனால் அவர்கள் அருகில் இருந்த இளம் தம்பதியினர் அவனைப் பார்த்து பரிதாப பட்டுக்கொண்டனர்....

மறுபடியும் அந்த வாலிபன் கத்தினான்.

"அப்பா மேலே பாருங்கள், மேகங்கள் நம்மோடு வருகின்றன" - என்றான்.

இதைக்கேட்டு தாங்க முடியாத தம்பதியினர் வாலிபனின் தந்தையிடம் "நீங்கள் ஏன் உங்கள் மகனை ஒரு நல்ல டாக்டரிடம் காட்டக் கூடாது" - என்றனர்.

அதற்கு அந்த வயதான அப்பா சிரித்துக் கொண்டே சொன்னார்.

"நாங்கள் டாக்டரிடம் இருந்துதான் வந்து கொண்டிருக்கிறோம்... என் மகன் பிறவிக் குருடு. இன்றைக்கு தான் அவனுக்கு பார்வை கிடைத்தது" - என்றார்.

அன்பு நண்பர்களே! உண்மையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு கதை உண்டு. மற்றவரை தீர்மானிக்க நினைத்தால் நாம் உண்மையை இழந்துவிடலாம்.

சில நேரங்களில் உண்மை நம்மை ஆச்சிரியப் பட வைக்கலாம்.

உருவத்தை பார்த்து யாரும் யாரையும் எடை போடவேண்டாம்.

**கதை - 2**

ஒரு அழகான சிறுமி தன் கைகளில் இரண்டு ஆப்பிள் வைத்திருந்தாள்.

அங்கு வந்த அவளின் தாய் , "நீ இரண்டு ஆப்பிள் வைத்திருக்கே ஒன்று எனக்கு கொடு!" என்றாள்.

தன் தாயை ஒரு வினாடி பார்த்த அந்த சிறுமி, பின் உடனே ஓர் ஆப்பிளை கடித்து விட்டாள். பின் உடனே இரண்டாவது ஆப்பிளையும் கடித்து விட்டாள்.

தாயின் முகத்தில் இருந்த சிரிப்பு உறைந்து போனது. தன் ஏமாற்றத்தை வெளிப்படுத்த முடியாமல் தவித்தாள்.

உடனே அந்த சிறுமி, தாயிடம் சொன்னாள்:- "அம்மா, இந்த ஆப்பிள்தான் இனிப்பாக இருக்கு நீ எடுத்துக்க!" என்றாள்.

நட்புக்களே, நீங்கள் யாராக வேண்டுமானாலும்இருக்கலாம். எவ்வளவு அனுபவமும் இருக்கலாம்.

அறிவு விஸ்தீரமாகவும் இருக்கலாம். ஆனால் ஒருவரை பற்றி கணிப்பதை சற்று தள்ளிப்போட்டு கணிக்கவும்.

அடுத்தவருக்கு போதுமான அளவு இடைவெளி கொடுத்து அவரை அறியவும்.

நீங்கள் அவரை பற்றிக்கொண்ட கண்ணோட்டம் தவறாகவும் இருக்கலாம்.

எதையும் மேலோட்டமாக பார்த்து கணிக்காமல், அவசரப்படாமல் ஆழ யோசித்து கணியுங்கள்..

மனக்கணக்கு தவறலாம்..மனிதரை பற்றிய கணக்கு தவறக் கூடாது.

**கதை - 3**

செட்டி நாட்டு வீதியொன்றில் கீரை விற்றுகொண்டு செல்கிறாள் ஒரு பெண்.

வீட்டுவாசலில் மகனோடு அமர்ந்திருந்த தாய், கீரை வாங்க அவளை கூப்பிடுகிறாள்.

ஒரு கட்டு கீரை என்ன விலை....?

ஐந்து ரூபாய்

"ஐந்து ரூபாயா? மூன்று ரூபாய்தான் தருவேன். மூன்று ரூபாய் என்று சொல்லி நாலு கட்டு கொடுத்திட்டு போ.

இல்லம்மா வராதும்மா

"அதெல்லாம் முடியாது. மூன்று ரூபாய்தான்." - பேரம் பேசுகிறாள் அந்த தாய்.

பேரத்திற்கு ஒத்துக்கொள்ளாத அந்த பெண் கூடையை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் சென்றுவிட்டு மேல ஒரு ரூபாய் போட்டுக் கொடுங்கம்மா என்கிறாள்.

"முடியவே முடியாது. கட்டுக்கு மூன்று ரூபாய்தான். தருவேன் - என்று பிடிவாதம் பிடித்தாள்.

கீரைக்காரி சிறிது யோசனைக்கு பிறகு சரிம்மா உன் விருப்பம் என்று கூறிவிட்டு நாலு கட்டு கீரையை கொடுத்துவிட்டு, பன்னிரண்டு ரூபாயை வாங்கி கொண்டு கூடையைத் தூக்கி தலையில்வைக்க போகும் போது கீழே சரிந்தாள்.

என்னடியம்மா காலை ஏதும் சாப்பிடல...? என்று அந்த தாய் கேட்க,

இல்லம்மா போய்தான் கஞ்சி காய்ச்சிணும்

சரி. இரு இதோ வர்றேன். என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றாள்.

திரும்பும்போது ஒரு தட்டில் ஆறு இட்லியும், சட்னியோடு வந்தாள். இந்தாசாப்ட்டுபோஎன்றுகீரைக்காரியிடம்கொடுத்தாள்.

எல்லாவற்றையும் பார்த்துகொண்டிருந்த அந்த தாயினுடைய மகன் கேட்டான்.

ஏம்மா! ஐந்து ரூபாய்க்கு பேரம் பேசுனிங்க.. ஒரு இட்லி ஐந்து ரூபாய்ன்னு வச்சுகிட்டாக்கூட ஆறு இட்லிக்கு முப்பது ரூபாய் வருதும்மா?" என்றான்.

அதற்கு அந்த தாய், வியாபாரத்துல தர்மம் பார்க்க கூடாது, தர்மத்துல வியாபாரம் பார்க்க கூடாதுப்பா என்று கூறினாள்.

இதுதான் உண்மையில் மனித நேயம் ......

**கதை - 4**

மாலையில் நடைப் பயிற்சியை முடித்துக் கொண்டு அந்த தம்பதியினர் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தனர்.

வரும் வழியில் ஒரு கயிற்றுப் பாலம் ஒன்று இருந்தது.

சற்று இருட்டியதால் இருவரும் வேகமாக நடக்கத் தொடங்கினர்.

திடீரென மழைச் சாரலும் வீசியது. வேகமாக நடந்து கொண்டிருந்தவர்கள் ஓடத்தொடங்கினர்.

கணவர் வேகமாக ஓடினார்.

கயிற்றுப் பாலத்தைக் கணவன் கடந்து முடிக்கும் போது தான் மனைவி பாலத்தினை வந்தடைந்தார்.

மழைச் சாரலோடு கும்மிருட்டும் சேர்ந்து வந்ததால் மனைவி பாலத்தை கடக்கப் பயப்பட்டாள்.

அதோடு மின்னலும் இடியும் சேர்ந்து கொள்ள பாலத்தின் ஒரு பக்கத்தில் நின்று கணவனை துணைக்கு அழைத்தாள்.

இருட்டில் எதுவும் தெரியவில்லை.

மின்னல் மின்னிய போது கணவன் பாலத்தின் மறு பக்கத்தில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது...

தன்னால் முடிந்த வரை சத்தமிட்டு கணவனை அழைத்தாள்.

கணவன் திரும்பிப் பார்க்கவில்லை.

அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது.

'இப்படிப் பயந்து அழைக்கிறேன். என்ன மனிதர் இவர் திரும்பி கூட பார்க்கவில்லையே!' என மிகவும் வருந்தினாள்.

மிகவும் பயந்து கொண்டே கண்களை மூடிக் கொண்டு கடவுளிடம் பாரத்தைப் போட்டு மெல்ல மெல்ல பாலத்தை கடந்தாள்.

பாலத்தை கடக்கும் போது இப்படி ஓர் இக்கட்டான நிலைமையில் கூட உதவி செய்யாத கணவனை நினைத்து வருந்தினாள்.

ஒரு வழியாக பாலத்தை கடந்துவிட்டாள்.

கணவரை கோபத்தோடு பார்க்கிறாள்.

அங்கு கணவர் மழையில் ஒரு பக்கம் உடைந்து தொங்கிக்கொண்டிருந்த கயிற்றுப் பாலத்தை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்.

சில சமயம் கணவர் குடும்பத்திற்காக எதுவும் செய்யாமல் மௌனமாக இருப்பவராகக் தோன்றும்...

ஆனால்,உண்மையிலேயே அவர் தன் குடும்பத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டுதான் இருப்பார்.

தூரத்தில் பார்க்கும் போது அன்பு இல்லாதவர் போல இருந்தாலும் அருகில் சென்று பார்க்கும் போது தான் அவரின் அன்பு தெரியவரும்.

வாழ்க்கை ஒரு விசித்திரமான விந்தை.

தூரத்தில் இருப்பது தெளிவாக தெரிந்தாலும் அருகில் வரும்போதே பொருள் புரிகிறது.

இந்த கோணத்தில் என்றாவது வாழ்கையை பார்த்தது உண்டா நாம்?

நாம் எப்போதும் இந்த கோணத்தில் தான் அனைவரிடமும் பழகவேண்டும்.

அப்போது தான் கோவம், ஈகோ இல்லாமல் நிம்மதியாக வாழ முடியும்.

வாழ்க்கைப் பாடத்தில் நிறைய கற்றுக் கொள்ளலாம்.

எது நல்லதுனு தேர்ந்தெடுங்க.

இவை வாழ்க்கைப் பாடத்தைப் போதிக்கும் நான்கு சம்பவங்கள்.

படிக்கும் போது பாருங்கள், உங்களை கூட உணர்ச்சிவசப்பட வைக்கும்!

# வாய்த்தகராறு காரணமாக ஏற்பட்ட கைக்கலப்பில் 45 வயது பெண் உயிரிழப்பு

திம்புள்ள,மார்ச் 20

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை போரஸ்ட்கிரீட் பகுதியில் நேற்று காலை 11.30 மணியளவில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

வாய்தகராறு ஒன்றின்போது, ஏற்பட்ட கைக்கலப்பில் தாக்கப்பட்டு இப்பெண் உயிரிழந்துள்ளமை காவல்துறை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில்பெண்கள்இருவரைகைதுசெய்துள்ளனர்.

ஹற்றன் நீதிமன்ற நீதவான் தலைமையில் மரண விசாரணைகள் இடம்பெற்றவுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது

சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஹெரோயினுடன் மூவர் கைது!

நாட்டின் மூன்று வேறுபட்ட பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள்தொடர்பானமேலதிகவிசாரணைகளை உரிய பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

**தலங்கம**

தலங்கம பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெற்கு ஹோகந்தர பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமையுடன் , அவரிடமிருந்து 3 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

**மீகொட**

மீகொட பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீகொடதெணிய பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

**வெஹெரகம**

வெஹெரகம பகுதியில் மத்திய முகாம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சியம்பலாவெள பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 313 கிராம் 950 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

# வனத் திணைக்களம் கையகப்படுத்திய காணிகள் சில பூநகரியில் விடுவிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஜெயபுரம் பகுதியில் கையகப்படுத்தப்பட்டிருந்த காணி மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 133 ஏக்கர் காணியே இவ் வாறு மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கையளிப்பு நிகழ்வு, பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம்(வெள்ளிக்கிழமை) காலை ஜெயபுரம் பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு காணியை மீள வழங்குவதற்கான சான்றிதழ்களை உரிமையாளர்களிடம் கையளித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சியில் மினி சூறாவளி; தூக்கி வீசப்பட்டன கூரைகள்!

கிளிநொச்சியில் கனமழையுடன் வீசிய மினி சூறாவளியால் ஐந்து வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிழக்குப் பகுதியில் குறித்த நேற்று மதியம் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தால் இரண்டு தற்காலிக வீடுகள் முழுமையாகவும் மூன்று நிரந்தர வீடுகள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளன.

சம்பவத்தை அடுத்து கரைச்சி பிரதேச செயலகத்தின் கவனத்திற்கு குறித்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கையை பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது.





## தினம் ஒரு

# விவசாயத் தகவல்

Agriculture Information

## 15.03.2021 தொடக்கம் 19.03.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

15.03.2021 தொடக்கம் 19.03.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய், பப்பாளி, அன்னாசி போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல்நிலை அவதானிக்கப்பட்டது. இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

1. பலாங்கொட, நுவரலியா மற்றும் பண்டாரவெல பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல். அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

2. நுவரலியா, கந்தபோலா, ராகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழங்கல். அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

3. யாழ்ப்பாணம், புத்தளம் பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

4. மொனராகல பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல். அல்லது குறைந்த வழங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

5. மொனரானகல, அநுராதபுரம், விலாச்சியா பகுதியில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

6. அநுராதபுரம், கலென்பிந்துநுவேவா பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

7. மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

8. நாவலப்பிட்டி பகுதிகளில் இருந்து குறைந்த வழங்கல் அல்லது சாதகமான வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

9. பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

10. நுவரெலியா, புத்தளம் பகுதிகளில் இருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் கோவா விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

11. யாழ்ப்பாணம், வெலிமட பகுதிகளிலிருந்து சாதகமான வழங்கல் அல்லது குறைந்த வழங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் உருளைக்கிழங்கு விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 15.03.2021 | 16.03.2021 | 17.03.2021 | 18.03.2021 | 19.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 220 | 190 | 180 | 175 | |
| கேரட் | 140 | 135 | 120 | 125 | |
| கோவா | 120 | 100 | 100 | 100 | |
| தக்காளி | 120 | 110 | 120 | 100 | |
| கத்திரிக்காய் | 60 | 70 | 80 | 80 | |
| பூசணி | 80 | 70 | 75 | 75 | |
| புடலங்காய் | 60 | 75 | 70 | 70 | |
| பச்சை மிளகாய் | 160 | 155 | 170 | 180 | |
| தேசி | 65 | 68 | 65 | 65 | |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 200 | 220 | 210 | 210 | |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 188 | 195 | 195 | 195 | |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி | 75 | 73 | 71 | 71 | |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 130 | 123 | 113 | 113 | |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 83 | 73 | 75 | 75 | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 475 | 470 | 475 | 475 | |
| தேங்காய் (சராசரி) | | | | | |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 15.03.2021 | 16.03.2021 | 17.03.2021 | 18.03.2021 | 19.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 175 | 195 | 205 | 195 | |
| கேரட் | 175 | 155 | 148 | 158 | |
| கோவா | 98 | 80 | 75 | 75 | |
| தக்காளி | 105 | 95 | 105 | 105 | |
| கத்திரிக்காய் | 75 | 95 | 95 | 78 | |
| பூசணி | 55 | 55 | 75 | 70 | |
| புடலங்காய் | 75 | 75 | 95 | 68 | |
| பச்சை மிளகாய் | 195 | 200 | 195 | 215 | |
| தேசி | 85 | 95 | 95 | 68 | |
| சின்ன வெங்காயம் (உள்ளூர் | 170 | 208 | 170 | 205 | |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | | | 188 | 198 | |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் இறக்குமதி | 78 | 75 | 58 | 53 | |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 98 | 118 | 95 | |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 538 | 500 | 518 | 495 | |
| தேங்காய் (சராசரி) | 74 | 74 | 69 | 68 | |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 15.03.2021 | 16.03.2021 | 17.03.2021 | 18.03.2021 | 19.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 195 | 215 | 225 | 215 | |
| கேரட் | 195 | 175 | 168 | 178 | |
| கோவா | 118 | 100 | 95 | 95 | |
| தக்காளி | 125 | 115 | 125 | 125 | |
| கத்திரிக்காய் | 95 | 115 | 115 | 98 | |
| பூசணி | 75 | 75 | 95 | 90 | |
| புடலங்காய் | 95 | 95 | 115 | 88 | |
| பச்சை மிளகாய் | 215 | 220 | 215 | 235 | |
| தேசி | 85 | 115 | 115 | 88 | |
| சின்ன வெங்காயம் (உள்ளூர் | 180 | 218 | 180 | 215 | |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 88 | 85 | 198 | 208 | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | | | | | |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | | | | |
| தேங்காய் (சராசரி) | 79 | 79 | 74 | 73 | |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 15.03.2021 | 16.03.2021 | 17.03.2021 | 18.03.2021 | 19.03.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 63 | 40 | 63 | 68 | |
| பப்பாசி | 75 | 105 | 75 | 65 | |
| அன்னாசி | 95 | 95 | 95 | 105 | |
| ஆப்பிள் (இறக்குமதி) | 44 | 44 | 44 | 44 | |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | 55 | |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 15.03.2021 | 16.03.2021 | 17.03.2021 | 18.03.2021 | 19.03.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 83 | 60 | 83 | 88 | |
| பப்பாசி | 95 | 125 | 95 | 85 | |
| அன்னாசி | 115 | 115 | 115 | 125 | |



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# உதயதாரகை முதல் காலைக்கதிர் வரையில் ....



முருகபூபதி
(அவுஸ்திரேலியா)

**ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட ‘விடியல் வீச்சு!’ சிறப்பு மலரில் வெளியான கட்டுரை இது. வடபுலத்திலிருந்து ‘காலைக்கதிர்’ நாளிதழ் வெளிவரத் தொடங்கியபோது அதன் முன்னோட்டமாக வெளியானது விடியலின் வீச்சு. அதில் இடம்பெற்ற கட்டுரை இது.**

கல்லிலிருந்து கணினி வரைக்கும் பாய்ந்திருக்கும் மொழிகளில் தமிழ் தொன்மையானது. இந்தத்




தொன்மையிலிருந்து உருவான ஊடகத்துறையின் வளர்ச்சியில் தமிழர்களின் வேட்கையையும் புரிந்துகொள்ள முடிகிறது.

விடியல் – உதயம் முதலான சொற்பதங்கள் இயற்கையுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் மனிதவாழ்வு மீதான நம்பிக்கையையும் சார்ந்திருக்கின்றன.

இற்றைக்கு 175 வருடங்களுக்கு – முன்னர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையிலிருந்து வெள்ளிதோறும் வெளியான உதயதாரகையிலிருந்து இன்று வெளியாகும் காலைக்கதிர் வரையில் இலங்கையின் வடபுலத்திலிருந்து வெளியான பத்திரிகைகளின் பெயர்களிலும் மேற்குறிப்பிட்ட இயற்கையின் எழுச்சியைக் காணமுடிகிறது.

அன்று பல தசாப்தங்களுக்கு முன்னர் அச்சு ஊடகமாக வெளியான உதயதாரகைக்கும், இந்த யுகத்தில் மின்னியல் ஊடகக் காலகட்டத்தில் வெளியாகும் (அச்சுமுறைமையில் மாற்றங்கள் பலவற்றைக் கடந்துள்ள நிலையில்) காலைக்கதிருக்கும் இடையே நிரம்பவேறுபாடுகள் இருந்தபோதிலும், அவற்றின்




நோக்கங்கள் ஒன்றாகவே திகழ்ந்திருக்கின்றன.

மக்களுக்கு செய்தியை தருவது. அதிலும் உண்மையைத்தருவது. உண்மைக்கு சுடும் இயல்பும் இருக்கிறது.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின்வளர்ச்சியைஅவதானிக்கும் அல்லது ஆய்வு செய்யப்புகும் எவரும் 1930 இன் பின்னரே இலங்கை தமிழ் சமுதாயத்தில் தமிழ் தேசியப்பத்திரிகைகளின் வளர்ச்சி விகசிக்கத்தொடங்கியது என்ற முடிவுக்கு வருவர்.

இலங்கை வடபுலத்திலிருந்து தான் இந்த விகசிப்பு 1930 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி ஈழகேசரி என்ற பெயருடன் தொடங்கியிருக்கிறது.

அதன் பின்னர்தான் அதே ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கொழும்பிலிருந்து வீரகேசரியின் முதலாவது இதழ் வெளியாகிறது.

அதற்கும் பிறகுதான் 1932 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி கொழும்பிலிருந்து தினகரன் வெளியாகிறது.

1930 இல் வடபுலத்திலிருந்து வெளிவரத்தொடங்கிய ஈழகேசரி 1958 இல் தனது 28 வயதில் ஆயுளை நிறுத்திக்கொள்கிறது.

அஸ்தமனத்திலிருந்து உதயம் என்பார்களே – அவ்வாறு அதே 1958 ஆம் ஆண்டு வடபுலத்திலிருந்து ஈழநாடு பிறக்கிறது. 11 – 02 – 1984 இல் தனது வெள்ளிவிழா இதழையும் தந்தது. இடையில் 1981 ஆம்ஆண்டுதீக்குளித்துபுனிதத்தை நிரூபித்தது.




ஈழநாடு 1958 இல் வெளியானதும் அதன் முதல் பிரதியை எடுத்துக்கொண்டு ஆசிபெறுவதற்காக யோகர் சுவாமிகளிடம் சென்றார்களாம்.

அலட்சியமாகப் பேசினாலும் உள்ளார்த்தத்துடன் பேசும் இயல்பு கொண்டிருந்த யோகர் சுவாமி ஏசுவார்கள், எரிப்பார்கள். துணிந்து நடத்துங்கள் என்றுதான் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

காலம் கடந்து 23 வருடங்களின் பின்னர் அவர் வாக்குப்பலித்தது. புத்தரும் அண்ணலும் வந்த திசையிலிருந்து வந்த அமைதிகாப்போரும் பத்திரிகைகள் மீது தம் பங்குக்குக் குண்டை வீசினர்.

வடபுலத்தின் வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பித்து ஒலித்த ஓங்காரக் குரல், முள்ளிவாய்க்காலில் அவலக்குரலாக நசிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் வடபுலத்தில் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் ஊடகவியலாளர்




களின் உயிர் பறிக்கப்பட்டது.

தந்தைக்காக மகனை காவு கொண்ட அநியாயம் நிகழ்ந்ததும் வடபுலத்தில்தான். இவற்றுக்கெல்லாம் காரணம் உண்மை சுடும் என்பதுதான்.

உதயதாரகை, ஈழகேசரி, ஈழநாடு, சுதந்திரன், ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், வெள்ளிநாதம், திசை, நமது ஈழநாடு, நமது முரசொலி, ஈழத்துதிராவிடம், வைகறை, தாய்வீடு, உதயன், வலம்புரி, (இதற்கு மேலும் இருக்கலாம்) என்று வடபுலத்திலிருந்து பல பத்திரிகைகள் வந்துள்ளன.

உதயன், வலம்புரி, தினக்குரல், தமிழ் மிரர், தினமுரசு என்பன பிற்காலத்தில் வெளிவரத்தொடங்கின.

இவ்வாறு எத்தனை பத்திரிகைகள் தோன்றினாலும் மறைந்தாலும் மக்களின் வாசிப்புத்தேவையை பூர்த்தி செய்யமுடியாது.

செய்தியைத்தேடும் தாகம் இருக்கும் வரையில் ஊடகத்துறையின் தேவையும் இருக்கும். இன்று உடனுக்குடன்உலகெங்கும்நடக்கும் சம்பவங்களை அறியக்கூடிய ஊடகங்கள் பல்கிப்பெருகிவிட்டன. இலத்திரனியல் ஊடகத்துறையின் வீச்சு பல பரிமாணங்களைத் தொட்டுவிட்டது.

முகநூல் கலாச்சாரம் செய்தி ஊடகத்தையும் விஞ்சும் அளவுக்கு




வளர்ந்தவிட்டது.

ஆயினும், வாசகர்களின்தேவை குறைந்தபாடயில்லை. அதனால் புதிய புதிய பத்திரிகைகள் அச்சு வாகனம் ஏறுகின்றன.

குறிப்பாக முதிய தலைமுறையினரில் பெரும்பாலானோர் இன்னமும் அச்சுப் பத்திரிகைகளையே எதிர்பார்த்திருக்கின்றனர். அதில் நம்பிக்கை வைத்து வாழ்கின்றனர்.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எத்தனை இணைய இதழ்கள் வெளிவந்தாலும், வகைதொகையின்றி வலைப்பதிவுகள் இருந்தாலும், மூத்தோர் நம்பியிருப்பது அச்சில் வெளிவரும் பத்திரிகைகள், இதழ்களையே.

அதனால் அச்சில் வெளியாகும் பத்திரிகைகளின் வரவு எதிர்பார்க்கப்படுகிறது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் நினைவூட்டவேண்டியிருக்கிறது.

தமிழர்கள் அரசிழந்து, ஆண்மை குன்றி, வறுமையிலும்




நோயிலும் வீழ்ந்து, அரிச்சுவடியை மறந்து, நாசமடைந்துவரும் இக்காலத்தில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் மட்டும் உன்னத நிலையிலிருத்தல் எப்படிச் சாத்தியமாகும்...?

ஆயினும், பத்திராதிபர்கள் கொஞ்சம் மனமிரங்கியும் ஜனங்களிடமிருந்துதாம்திரவியம் வாங்குவதைக் கருதியும் இயன்றவரை தமது தொழிற்கூடங்களிலே நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்த மனிதர்களை நியமிப்பது தர்மமாகும்

– என்று மகாகவி பாரதியார் தாம் வெளியிட்ட இந்தியா என்னும் பத்திரிகையில் (24–04–1909 ஆம் திகதி) எழுதியிருக்கிறார்.

எனவே, இதழியல் ஆர்வத்தை மாத்திரம் மூலதனமாகக்கொண்டிருப்பதில்லை. அதற்கும் அப்பால் உண்மையைஆதாரமாகக்கொண்டிருக்கிறது.

காலைக்கதிரும்கடக்கவேண்டிய தூரம் அதிகம். உண்மையின் வெளிச்சத்தில் அது தன் பயணம் தொடரும். வாழ்த்துவோம்.

( மூலம் : ‘விடியலின் வீச்சு!’ )



காலைக்கதிர் Kalaikkathir

# பசறையில் 200 அடி பள்ளத்தில் விழுந்தது பஸ்; 14 பேர் மரணம்!

## 46 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை – லுணுகலை பிரதான வீதியின் மெத்தக்கடை பகுதியில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 46 பேர் படு காயமடைந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து இன்று காலை 6.55 மணியளவில் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை – லுணுகலையில் கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற தனியார் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர்கள் பசறை வைத்தியசாலைக்கும், மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்தில் படுகாயமடைந்த சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது எனவும், உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம், பதுளை வைத்தியசா லையில் இரத்தத் தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும், இரத்த தானங்களை மேற்கொள்ள பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பசறை விபத்து குறித்து ஆராய செந்தில் தொண்டமான் பணிப்பு

## பாதிக்கப்பட்டோருக்கு உடன் உதவி

பசறையில் இன்று காலை இடம்பெற்ற கோர பஸ் விபத்தின் போது உயிரிழந்தவர்களுக்கு, முதல் கட்டமாக 15 ஆயிரம் ரூபாவை உடன் வழங்க, ஊவா மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி, பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன், லுணுகலை பிரதேச சபையின் தவிசாளருடன் கலந்துரையாடி, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான பிரேதப் பெட்டிகளை வாங்கிக் கொடுக்கவும் அவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

மேலும், சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கான நிதி உதவியைச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, காயமடைந்தவர்களுக்கான உரிய சிகிச்சைகளை வழங்கவும், தேவையேற்படின் அவர்களை மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்புக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதாரத்துறையினருக்குச் செந்தில் தொண்டமான் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, விபத்துக்கான காரணம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊவா மாகாண போக்குவரத்துக்கு ஆணைக்குழுவுக்குப் பணிப்புரை விடுத்துள்ள அவர், விபத்துக்குள்ளான பஸ்ஸில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், அதைக் கொண்டு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# காடழிப்புக்கு எதிராக செவ்வாய் கொழும்பில் பெரும் போராட்டம்!

## சஜித் அணியின் ஏற்பாட்டில்

காடழிப்புகளை நிறுத்துமாறும், சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக விசேட பொறிமுறை யொன்றை உருவாக்குமாறு வலியுறுத்தியும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, காடழிப்பு உட்பட சுற்றாடலுக்கு இழைக்கப்படும் தீங்குகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அதன்பின்புலத்தில் உள்ள அரசியல் கரங்களை அம்பலப்படுத்துவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தி ஜவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, புத்திக பத்திரண, காவிந்த ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க உள்ளிட்டோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

## காணி, பொலிஸ் அதிகாரங்களுடன்

# மாகாண சபைத் தேர்தலை நடத்த இடமளிக்கமாட்டோம்

## இராஜாங்க அமைச்சர் விதுர திட்டவட்டம்

மாகாண சபைக்கான அதிகாரங்களை முழுமையாக நீக்கிய புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னரே மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். காணி,பொலிஸ் அதிகாரங்களுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவ தென்றால் அதற்கு ஒருபோதும் இடமளிக் கமாட்டோம்.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தியாக வேண்டும் எனத் தமிழ் அரசியல் தலைமைகள் வலியுறுத்தியுள்ள நிலையிலும், தேர்தலை நடத்துவதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்துள்ள நிலையிலும் மாகாணசபை தேர்தல் குறித்து அரசுக்குள் இரு வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில், தேர்தல் குறித்து இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா அல்லது கைவிடப்பட வேண்டிய ஒன்றா என்பது குறித்து முதலில் ஆழமாக ஆராய்ந்து, சகல தரப்புடனும் பேச்சுகளை முன்னெடுத்து அதன் பின்னர் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அதற்கான செலவுகள், அவ்வாறு அதிகளவு பணத்தை விரயம் செய்வதால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் என்னவென்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இலங்கைக்கு மாகாண சபை முறைமை அவசியமில்லை என்பதே எனது கருத்தாகும். எனது இதே நிலைப்பாட்டில் அரசில் பலர் உள்ளனர்.

எனினும், அரசாக தீர்மானம் எடுக்கையில் தனித்தீர்மானம் எடுக்காது சகலரும் இணைந்து பேச்சுகளின் மூலமாக தீர்மானிக்க வேண்டும்.

மாகாண சபை முறைமை என்பது ஒரு சிலரின் அதிகார மோகத்துக்காக வேறு நாடுகளின் தலையீட்டில் எமக்குத் திணிக்கப்பட்டதாகும். நாமாக விரும்பி இதனைப் பெற்றுக்கொள்ளவில்லை.

எமது அரசமைப்பில் எமக்குப் பிடிக்காத ஒரு விடயத்தை உள்நுழைத்துக் கொண்டு இத்தனை காலமாகக் கொண்டு செல்கின்றோம். எனவே, இனியும் எமக்கு இவ்வாறான அநாவசிய சரத்துக்கள் அவசியமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது எமது நாட்டுக்குப் புதிய அரசமைப்பு ஒன்றே அவசியப்படுகின்றது. எனவே, புதிய அரசமைப்பின் பின்னர் தேர்தல் குறித்து சிந்திக்க வேண்டும். இப்போதுள்ள முறைமைக்கு அமைய அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது. முதலில் புதிய அரசமைப்பை உருவாக்கி, மாகாண சபைக்கான அதிகாரங்களை நீக்கிவிட்டு தேர்தலை நடத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் அரசில் இருந்து கொண்டே இந்த முறைமையை நாம் முழுமையாக எதிர்ப்போம் – என்றார்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 11 – 02 – 1935



மறைவு 19 – 03 – 2021

## இந்திராணி துரைரத்தினம்

1960 தொடக்கம் 1977 வரை இலங்கை தமிழ் அரசுக் கட்சியிலும், 1977முதல் 1983வரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் கதிரிப்பிள்ளை துரைரத்தினம் அவர்களது அன்பு மனைவி இந்திராணி துரைரத்தினம் அவர்கள் 19/03/2021 அன்று கனடாவில் காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:—
எஸ்.எக்ஸ்.குலநாயகம்.
இ.த.அ.கட்சியின் நிர்வாகச் செயலாளர்.

தொகுப்பு -
- ப்ரியமதா பயஸ் -

# எதையாவது விட்டுவிட்டுச் செல்கிறீர்களா?

ஒரு நாள் தந்தையை ஒரு உயர்தர ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான் மகன்.

தந்தையோ வயதுமுதிர்ந்தும் கொஞ்சம் இயலாமலும் இருந்தார்.

அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பலவீனமாக இருந்த



தால் சோற்றுப் பருக்கைகளும் உணவுத்துண்டுகளும் அவரது சட்டைமேலும்தரைமேலும்விழுந்து கொண்டிருந்தது.

பக்கத்திலிருந்து சாப்பிடுவோர் இதைப்பார்த்து தங்கள் முகத்தைச் சுழித்துக் கோணல்மாணல் ஆக்கி மகனைப்பார்த்து முறைத்துக் கொண்டு இருந்தனர்.

ஆனால் மகனோ மிகவும் அமைதியாகஅப்பாசாப்பிடுவதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும் மகன் எந்தத் தயக்கமும் இல்லாமல் தனது தந்தையை ஓய்வு அறைக்கு அழைத்துச்சென்று அவரது முகத்திலும் ஆடையிலும் ஒட்டி இருந்த உணவுப்பருக்கைகளை துடைத்துக் கழுவி, அவரது தலையை வாரி அவரது கண்ணாடியையும் துடைத்து அவருக்கு மாட்டினான்.

இருவரும் ஓய்வு அறையில் இருந்து வெளியில் வர ஹோட்டல் மிக அமைதியானது.

மகன்பணம்செலுத்துமிடத்துக்கு சென்று பணம் செலுத்தி தனது தந்தையை கவனமாக அழைத்துச் செல்ல தயாரானான்.

அப்போது அங்கு சாப்பிட்டுக் கொண்டு இருந்தவர்களில் ஒருவர் எழுந்து எதையாவது விட்டுவிட்டுச் செல்கிறீர்களா? என்று கேட்டார்.

மகனோ இல்லையே நான் எதையும்விடவில்லை என்றார். அதற்கு அந்த மனிதர் இல்லை நீங்கள் இங்கு சிலதை விட்டுவிட்டுச் செல்கிறீர்கள்.

இளையோருக்கு ஒரு பாடத்தை விட்டுவிட்டுச் செல்கிறீர்கள். அத்தோடு எல்லாப் பெற்றோருக்கும் நம்பிக்கையை விட்டுவிட்டுச் செல்கிறீர்கள். என்றதும் அந்த உணவகத்தில் இருந்த அனைவரும் எழுந்து நின்று கை தட்டினர். உலகத்தில் நாம் விட்டுச்செல்லும் நல்லவிடயங்கள் எம் தலைமுறைக்கு மட்டுமல்ல அடுத்த தலைமுறைக்கும் உதவும் .

# நாம் எவ்வளவு தவறுகளைச் செய்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் வாழ்கிறோம்



நாம் மேலும் சென்று வாழ்க்கை நமக்கு அளிக்கும் பாதைகளில் ஒன்றில் இறங்கினால், முடிவுகளை எடுத்து முடிவுகளை மதிப்பீடு செய்வது அவசியம்.

சில நேரங்களில் அவை வெற்றிகரமாக இருக்கும், மற்ற நேரங்களில், நாங்கள் தவறு செய்திருப்போம். இருந்தாலும், சிறந்த வழி எப்போதும் நம்முடன் இருக்கும் அனுபவமும் கற்றலும் ஆகும். நாம் நடக்காவிட்டால், நாங்கள் தடுக்கப்படுகிறோம், உருவாகவில்லை.

தோல்வியுற்றதற்காக நம்மைக் குற்றம் சாட்டுவது நமது மனித நிலையை ஏற்றுக் கொள்ளாமல், தொடர்ந்து கற்றல் மற்றும் முன்னேறுவதற்கான வாய்ப்பை இழப்பது. நாம் எவ்வளவு தவறுகளைச் செய்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் வாழ்கிறோம் என்று சொல்லலாம்.

வாழ்க்கை கற்றல், நீங்கள் கற்றலை நிறுத்தும்போது, நீங்கள் இறந்துவிடுவீர்கள்

# நேர்மையே முன்னேற்றத்திற்கு வழி

நேர்மையாக வாழ்வதில் சிரமம் இருக்கதான் செய்யும். இருப்பினும் மனதில் துணிவுடன் இருந்தால் நேர்மையாக வாழ்ந்து முன்னேற்றத்திற்கு வழி காணலாம்.

இன்று ஒழுக்கம், நேர்மை இவற்றைக் காணுவது என்பது அரிதாகவே உள்ளது. ஒழுக்கம், நேர்மை உடையவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள்.

அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கப்பெறுவதில்லை. மாறாக வெறுத்து ஒதுக்கப்படுகிறார்கள். பணம் கொடுத்தால் பொய் சாட்சி சொல்வது, பிறர் சொத்தை அபகரிக்க நினைப்பது, ஒரு பொய்யையே பல முறை சொல்லி அதை உண்மையாக்குவது, சுயநலத்தோடு வாழ்வது போன்றவை நல்ல சமுதாயத்திற்கு அடையாளமல்ல. தீய செயல்கள் செய்பவர்களிடையே இருக்கும் ஒற்றுமை நேர்மையானவர்களிடம் காணப்படுவதில்லை.



காரணம் நேர்மையானவர்கள் சிலராகி, நேர்மையற்றவர்கள் பலராகி விட்டதுதான். இத்தகையவர்களுக்குத்தான் சமுதாயத்தில்பயம்கலந்த மரியாதை கொடுக்கப்படுகிறது. இதனால், நேர்மையான எண்ணம் கொண்டவர்கள் பயந்து விலகி விடுகிறார்கள். நல்லவர்கள் தீமையை எதிர்த்து சண்டையிடுவது அரிது. ஏனெனில் அதனால் வெற்றியைவிட அவர்களுக்கு அவமானம் தான் மிஞ்சும். நேர்மையாக இருப்பவர்களுக்கே நெருக்கடி, அச்சுறுத்தல் கொடுக்கப்படுகிறது. நேர்மை உறங்கும் போது அநியாயம் விழித்தெழும் என்பது தான் காலம் காட்டும் உண்மை.

பெற்றோர்களிடம் நேர்மை இருந்தால் தான் பிள்ளைகளிடமும் நேர்மை இருக்கும். முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவர் முதலில் நேர்மையானவராக இருக்க வேண்டும். பிறர் பொருளின் மீது ஆசை கொள்ளாதவராக இருக்க வேண்டும். நேர்மையற்றவர்களின் உள்ளம் எதிர்காலத்தையே அழித்து விடும்.

பணம் இல்லாதவனுக்கு பணம் சம்பாதிப்பதுதான் வெற்றி. ஆனால் பணம் இருந்தும் அதை அனுபவிக்க முடியாமல் நோயால் அவதிபடுபவருக்கு அதிலிருந்து மீண்டு, ஆரோக்கியமாக வாழ்வதுதான் வெற்றி. இப்படி ஒவ்வொருவருக்கும் வெற்றி என்பது அவர்களிடம் இல்லாத ஒன்றை தேடி ஓடுவதே என்றாகி விடுகிறது. ஆனால் எல்லோருக்கும் பொதுவான ஒரு வெற்றி இருக்கிறது.

அது வாழ்க்கையில் நிறைவாக வாழ்வது, அடுத்தவருக்கு வழிகாட்டியாய் இருப்பது, பிற உயிர்களை மதிப்பது அவற்றுக்கு துன்பம் தராமல் இருப்பது, ஆக மொத்தம் சந்தோஷமாக வாழ்வதற்கும், வெற்றிகரமாக வாழ்க்கை இருப்பதற்கும் நேர்மை அவசியம். நேர்மையாக வாழ நம்மை தயார்படுத்தி கொள்வது அவசியம். உடலும், மனதும் தூய்மையாக இருப்பின் நாம் நினைக்கின்ற எந்த காரியத்தையும் செய்து முடிக்கும் வலிமையும், வழியும் தானாக பிறக்கும்.



# வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கையை சிந்தித்து பார்க்க வேண்டும்

நாம் எப்போதெல்லாம் தன்னம்பிக்கையை இழக்கிறோமோ அப்போதெல்லாம் நம்மைவிட துயரமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து அதிலிருந்து மீண்டு வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கையை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது தான் நம்முடைய வாழ்க்கை எத்தனை எளிதானது என்பதை உணர முடியும்.

உதாரணமாக சொல்லப்போனால் நமக்கு பெரிய துன்பமாக இருப்பது பொருளாதார நெருக்கடியோ அல்லது இலட்சியம் நிறைவேறாமல் போனதோ அல்லது உணர்வுகளின் வலியோதான். ஆனால் அதை விட துயரத்தை அனுபவித்தும் வாழ்க்கையின் பொருளை உணர்ந்தவர்கள் பலர்.

இரண்டு கை கால்களை இழந்த ஒருவர் இன்று சிறந்த பேச்சாளராக வலம் வருகிறார். தந்தை தாயில்லாமல் வளரும் எத்தனையோ குழந்தைகள் சாதனை படைக்கின்றர். அறுபது வயதிற்கு மேல் ஒருவர் கே எஃப் சி எனும் வறுத்த கோழியை கண்டு பிடித்து பிரபலமானார்.

அவ்வளவு ஏன் கண்ணாடியில் உங்கள் விம்பத்தையே பாருங்கள். இதுவரை உங்கள் வாழ்க்கையில் நடந்த துயரங்கள் அத்தனையையும் கடந்து வந்துள்ளீர்கள் என்றால் நம்பிக்கை இல்லாமலா வந்திருப்பீர். அதை கெட்டியாக பிடித்துக் கொண்டு இலக்கை நோக்கிச் செல்லுங்கள்.

வென்றால் மகிழ்ச்சி இல்லையேல் அனுபவம். அவ்வளவு தானே வாழ்க்கை.

# தவறு செய்ய எனக்கு உரிமை உண்டு

எந்த சந்தேகமும் இல்லாமல், நாங்கள் தவறு செய்வோம், தோல்வியடைவோம், நாங்கள் தவறாக இருப்போம் என்பதை ஏற்றுக்கொள்வது முக்கியம். இருப்பினும், இது முன்னேற ஒரே வழி நாங்கள் முன்மொழிகின்ற இடத்திற்குச் செல்லுங்கள். எங்களுக்கு உரிமை உண்டு தவறாக இருக்க வேண்டும் ஏனென்றால் நாம் பரிபூரணர்கள் அல்ல, இது தோல்வி அல்ல, ஆனால் வாழ்க்கையின் போதனைகளின் ஒரு பகுதி.

நாம் கற்றுக் கொள்ள விரும்பினால், நம்மை வளர்த்துக் கொள்ள விரும்பினால், நாம் தோல்வியடையப் போகிறோம் என்பதில் சந்தேகமில்லை. எனினும், எழுந்து முன்னேறுவது நம்மை வலிமையான, துணிச்சலான மற்றும் புத்திசாலித்தனமாக்குகிறது. பெருமைப்படுவதற்கான காரணங்களின் தொகுப்பை இது நமக்கு வழங்குகிறது.

அனுபவம் ஒருபோதும் தோல்வி அல்ல, ஏனென்றால் அது எப்போதும் எதையாவது காண்பிக்கும்

- தோமஸ் அல்வா எடிசன்-



காலைக்கதிர் Kalaikathir

# கொரோனாவிற்குப் பலியானோருக்குத் திருப்பலி போர்த்துக்கல் பாத்திமா அன்னை திருத்தலத்தில்!

ஐரோப்பாவில் மீண்டும் பரவி வரும் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக 23 ஜனவரி 2021 முதல் திருப்பயணிகளுக்கு மூடப்பட்டிருந்த போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா அன்னை திருத்தலம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 50 நாள் இடைவெளிக்குப் பின் பொதுமக்களுக்கென திறக்கப்பட்டுள்ள இத்திருத்தலத்தில் 15 மார்ச் 2021 அன்று நிறைவேற்றப்பட்ட ஆறு திருப்பலிகளும் ஐரோப்பாவில் கொரோனா நோய்க்குப் பலியானவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்கென ஐரோப்பிய ஆயர்கள் பேரவை கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்புக்கொடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்–19 பெருந்தொற்றால் ஐரோப்பாவில் 8 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில் அவர்களுக்கென பாத்திமா அன்னை திருத்தலத்தில் அனைத்து திருப்பலிகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டன எனவும் இந்நோய்க்குப் பலியானோரின் ஆன்ம இளைப்பற்றிக்காக போர்த்துக்கல்லின் அனைத்து துறவு சபைகளும் அன்னை மரியா திருத்தலத்தோடு இணைந்து இந்நாளில் செபித்தனர். கொரோனா பெருந்தொற்றால் உயிரிழந்தோர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் – நோயுற்றுள்ளோர் – நலப்பணியாளர்கள் – சுயவிருப்பப் பணியாளர்கள் என அனைவருடனும் தங்கள் ஒருமைப்பாட்டை தெரிவிக்கும் விதமாக ஐரோப்பிய திருஅவைகளின் இந்த முயற்சி உள்ளது என்று கூறிய பாத்திமா திருத்தலப் பொறுப்பாளர், இது வரை விசுவாசிகளின் நேரடி பங்கேற்பு இல்லாமல் திருப்பலியை இணையும் வழியாக நிறைவேற்றிக் கொண்டிருந்த நிலை தற்போது மாறித் திருப்பயணிகளை திருத்தலத்திற்குள் வரவேற்க முடிந்தது மகிழ்ச்சியைத் தருகின்றது என்றார்.

# அன்பியம் ஊடாக கிறிஸ்தவ வாழ்வினைப் புதுப்பித்தல் மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஒன்பதாவது மாநாடு






மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மறைமாவட்ட மேய்ப்புப் பணி சபையின் பொதுக்கூட்டமும் ஒன்பதாவது மாநாடும் மட்டக்களப்பு சத்திரக்கொண்டான் கிளனி மேய்ப்புப்பணி சபையின் நிலையத்தில் மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் ஜீ.அலெக்ஸ் றொபேட் அடிகளார் தலைமையில் 13 மார்ச் 2021 அன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மறைமாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழு இயக்குநர் இக்னேஸ்யோசப் அடிகளாரின் வரவேற்பு உரையுடன், மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகையின் ஆசியுடன் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் யாழ்ப்பாண மறைமாவட்டக் குருவும் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை விரிவுரையாளருமான எம்.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார் 'அன்பியம் ஊடாக கிறிஸ்தவ வாழ்வினை புதுப்பித்தல்' எனும் தலைப்பில் உரையாற்றினார். 2021ஆம் ஆண்டு மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் அன்பிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அன்பியம் ஊடாக கிறிஸ்தவ வாழ்வினை புதுப்பித்தல் என்னும் தலைப்பு ஆயரினால் அறிவிக்கப்பட்டு அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# மன்னார் மடுமாதா திருத்தலத்தில் விடுதிகள் கட்ட இந்தியா உதவி



இலங்கை மன்னார் மறைமாவட்ட மடுமாதா திருத்தலத்தில் திருப்பயணிகள் தங்குவதற்கென 144 விடுதிகளைக் கட்ட இந்திய அரசு முன்வந்துள்ளது. இலங்கைக்கான இந்திய தூதுவர், இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்திய அரசு 15 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் மடு மாதா திருத்தலத்தில் தங்கும் விடுதிகளை கட்ட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பயணிகளுக்கு தங்கும் விடுதிகளைக் கட்டுவதில் உதவ இந்திய அரசு இசைவு அளித்ததைத் தொடர்ந்து வருங்காலத்தில் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த உள்ளனர் என இந்திய தூதர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரசித்தி பெற்ற மருதமடு அன்னையின் திருத்தலமானது இலங்கை வாழ் தமிழ், சிங்கள கத்தோலிக்க மக்களை இனவேறுபாடுகளை மறந்து அன்னையின் பாதத்தில் ஒரு தாயின் மக்களாக ஒன்று கூட அழைப்பு விடுக்கும் ஒரு திருத்தலமாகும். இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி அனைத்து மதமக்களும் மதபேதமின்றி மருதமடு அன்னையின் திருத்தலத்திற்கு வருகை தருவது இத்தலத்தின் சிறப்பம்சமாகும்.

# ஆசியாவில் அதிகமான கத்தோலிக்கர்களைக் கொண்ட பிலிப்பீன்ஸில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு 500 ஆண்டு

பிலிப்பைன்ஸ்நாட்டில்கிறிஸ்தவம் பரவத்தொடங்கியதன் 500ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 14 மார்ச் 2021 அன்று வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில் திருப்பலி நிறைவேற்றினார்.

1521ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டில் முதன்முதலில் திருப்பலி நிறைவேற்றப்பட்டதன் 500ஆம் ஆண்டைக் கொண்டாடும் விதமாக அந்நாட்டு ஆயர்கள் 2012ஆம் ஆண்டிலிருந்து ஒன்பது ஆண்டுகள் ஆன்மீகத் தயாரிப்பு ஒன்றையும் ஆரம்பித்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் 500ஆம் ஆண்டு நிறைவையொட்டிய கொண்டாட்டத்தில் திருப்பலியை பிலிப்பைன்ஸ் நாட்டு விசுவாசிகளுடன் புனித பேதுரு பெருங்கோவிலில் நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுள் நம்மை எவ்வளவு தூரம் அன்புகூர்ந்தார் என்றால் தன் ஒரே மகனையே நமக்கு கையளித்தார் என, நற்செய்தியின் இதயமாக இருக்கும் கூற்று வெறும் கொள்கை அல்லமாறாக நம் வாழ்வுப் பயணம் முழுவதும் நாம் பெறும் அனுபவம், கடவுள் நம்மை அன்புகூர்ந்தார், தம் ஒரே மகனையே நமக்கு அளித்தார் என்ற இரு கூற்றுகள் குறித்து இந் நாளில் சிந்திப்போம் என்ற அழைப்புடன், தன் மறையுரையைத் தொடக்கினார்.

ஆசியாவில் கத்தோலிக்கரை அதிகமாகக் கொண்டிருக்கும் பிலிப்பைன்ஸ் நாடு 7ஆயிரத்து 641 தீவுகளைக் கொண்டதாகும். இந்நாட்டின் ஒரு கோடிக்கு மேற்பட்ட மக்கள் ஏறத்தாழ நூறு நாடுகளில் புலம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

# ஊடகங்கள் மக்களின் நலனுக்காக பணியாற்றும் கடப்பாடு உடையவை

**வத்திக்கான் திருப்பீட உயர் அதிகாரி தெரிவிப்பு**

மோதல்கள் நிறைந்துள்ள இக்காலத்தில் உண்மையான நடுநிலையான தகவல்களை வழங்கவேண்டிய கடமையை ஊடகங்களும் செய்தியாளர்களும் பெற்றுள்ளனர். மக்களின் பொதுநலனுக்காக ஊடகங்கள் பணியாற்றவேண்டும் என்பதிலும் உண்மை, சுதந்திரம், நீதி ஆகிய விழுமியங்களின் அடிப்படையில் வெளியிடப்படும் தகவல்களைப் பெறும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு என்பதிலும் திருப்பீடம் உறுதியான நிலைப்பாடு கொண்டுள்ளது என ஊடக சுதந்திரம் மற்றும் பாலின சமத்துவம் என்ற தலைப்பில் வியென்னாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய வத்திக்கான் திருப்பீட உயர் அதிகாரி தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# அமைதியாய் இரு; ஞானத்தோடு இரு; கனிவுடன் இரு சர்வதேச மகிழ்ச்சி நாள் நேற்றைய தினம் அனுஷ்டிப்பு

*மகிழ்ச்சியாக வாழ்வது மனித உரிமைகளில் ஒன்று. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதியை உலக மகிழ்ச்சி நாளாக உருவாக்கியது. அந்த அவையின் அறிவிப்பின்படி ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20ஆம் திகதி (நேற்று) ஒவ்வொரு தலைப்பில் உலக மகிழ்ச்சி நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.*

*2021ஆம் ஆண்டு உலக மகிழ்ச்சி நாள் மார்ச் மாதம் 20 ஆம் திகதி "அமைதியாய் இரு - ஞானத்தோடு இரு - கனிவுடன் இரு" என்ற தலைப்பில் சிறப்பிக்கப்பட்டது.*

*கொவிட்-19 பெருந்தொற்றின் இரண்டாம் மற்றும் மூன்றாம் அலையின் நெருக்கடிகளில் வாழ்கிறோம்.*

*பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மகிழ்ச்சியோடு பலர் உள்ளனர். மகிழ்ச்சியை விலைக்கு வாங்க அது கடைச்சரக்கு அல்ல, மாறாக அது நம் வாழ்வின் செயல்களிலிருந்து வெளிப்பட வேண்டும். அமைதியாய் இருங்கள் - ஞானத்தோடு இருங்கள் - கனிவுடன் இருங்கள் -மகிழ்ச்சியாக வாழ்வது மனித உரிமைகளில் ஒன்று என ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை தெரிவித்துள்ளது.*

# டொன் போஸ்கோ உதைபந்தாட்ட அக்கடமியின் போட்டியில் வெற்றியீட்டியது நானாட்டான் பங்கு




முருங்கன் மறைகோட்டத்திற்கு உட்பட்ட 14 பங்குகளை சேர்ந்த இளைஞர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி டொன் போஸ்கோ உதைபந்தாட்ட அக்கடமி நிறுவனத்தினால் 13 மார்ச் 2021 அன்று முருங்கன் டொன் போஸ்கோ விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

14 பங்குகளை சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொண்ட மேற்படி போட்டியின் இறுதிப்போட்டியில் நானாட்டான் பங்கு இளைஞர்களை எதிர்த்து முருங்கன் டொன்போஸ்கோ அணியினர் போட்டியிட்டனர். இறுதியில் தண்ட உதை மூலமாக நானாட்டான் இளைஞர்கள் வெற்றியை பெற்றுக் கொண்டார்கள்.

இந்த போட்டியில் வெற்றியடைந்த நானாட்டான் இளைஞர்களுக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். அதேபோன்று இந்த போட்டியில் பங்குபற்றிய ஏனைய 13 பங்குகளைச் சார்ந்த இளைஞர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதிக்கும் கோவில் வீதி சந்திக்கும் இடையில் (10x12 SQ ft) கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-077 020 7073

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:-077 477 9443, 076 141 9299

மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் கடை தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 354 7789

வாகன தரப்பிட வசதிகளுடன் 5 அறையும் 3 குளியலறையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. மாத வாடகை 50,000/= முற்பணம் 3, 00 000/=)

கோண்டாவிலில் 2பரப்புக் காணியில் 8 அறை, 3 குளியறைகளுடன் புதிய வீடு வாடகைக்குண்டு. மாதவாடகை-30,000/= முற்பணம் 3,00,000/=

திருநெல்வேலியில், குளியல் அறை தனியாக அமைந்த 2 அறைகள் கொண்ட வீடு வாடகைக் உண்டு. மாதம் 15,000/= முற்பணம் 200,000/=

யாழ் நகரில் கடை வாடகைக்கு 400 சதுரஅடி கடை முற்பணம் 2 1/2 லட்சம், மாத வாடகை 25,000/=
யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடுகள், கடைகள் விலைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

## மரக் கன்றுகள் விற்பனைக்கு

11/2 மாத மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு - 021 492 7778

தரமான இஞ்சி கன்றுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 021 492 7778

## மணமகள் தேவை

பிறந்த திகதி - 04. 01.1988, மதம் - இந்து N,நட்சத்திரம் - புனர்பூசம் 4, கி.பா - 8, சூரி/செவ் - 6 இல், தகைமை - AL தொழில் - எலக்சரிசன் டோகா, எதிர்பார்ப்பு - ஓரளவு படித்த பெண்.

பிறந்த திகதி - 31.12.1987, மதம் - இந்து N, நட்சத்திரம் - கார்த்திகை 2, கி.பா - 45 சூரி/ செவ் - 10 இல், தகைமை - AL, தொழில் - காவல் துறை உத்தியோகத்தர், எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.
தொடர்புகளுக்கு - 077 197 1667

கனடாவில் வாழும் 27 வயது 2 இல் சூரியன் செவ்வாய் கேட்டை நட்சத்திர இந்து வேளாளர் மணமகளுக்கு இலங்கையில் மணமகனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு - 076 527 1807

யாழ் R.C.V, 1989 மணமகனிற்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு - 0777568282

## மணமகன் தேவை

புலோலி இந்து V, 1975, அனுசம், விவாகரத்து பெண்ணிற்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - 0766688256

கரவெட்டி கொழும்பு இந்து V, 1980 அத்தம் U.k Citizen, விவாகரத்து பெண்ணிற்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - 0161005277

துன்னாலை இந்து V 1987 புரட்டாதி கொழும்பு பல்கலைகழகப் பெண்ணிற்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - 0761005277

நெல்லியடி இந்து V 1988 பூசம் மணமகன் தேவை
தொடர்புகளுக்கு - 076100527

## திருமண சேவை

யாழ் இந்து கிறிஸ்தவ ஜாதகங்கள் உண்டு.உள்நாடு வெளிநாடுகளில் உள்ளவர்கள் பொருத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 621 3832
Email: thiriChelvam1964@gmail.com

## தாயகம் MATRIMONY

உலகலாவிய தமிழர்களுக்கான இணையவழி வரன் தேடும் சேவை.
www.thayagammatrimony.com
தொடர்புகளுக்கு - 0773573406

## வேலை வாய்ப்பு

நாவற்குழியில் இயங்கும் நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர், பராமரிப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு:- 076 740 3814

கணினி திருத்துவதற்கும் வேலை பழக விரும்புபவர்கள் ஆண், பெண், இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 914 7472

தினசரி பத்திரிகைகள் வீடுகளுக்கு விநியோகிக்கடும்.
தொடர்புகளுக்கு - 077 292 6316

யாழில் இயங்கும் உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை.
தொடர்புகளுக்கு - 077 221 1677
021 222 2054

சி.சி.ரீ.வி கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு - 077 473 6057

திருநெல்வேலியிலுள்ள IT நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை
தொடர்புகளுக்கு - 077 408 9570

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் இயங்கி வரும் குடில் நிறுவனத்திற்கு முகாமையாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 011 7004

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் இயங்கி வரும் Farmo.lk நிறுவனத்திற்கு முகாமையாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 077 7113 333

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் செக்கு நிறுவனத்திற்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.
தொடர்புகளுக்கு - 076 011 7005

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர் உடனடியாக தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 0772190128
0761005277

யாழ்பாணத்திலுள்ள உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. Rice செய்பவர்.
தொடர்புகளுக்கு - 0773970285
0761005277

யாழில் வீடொன்றிற்கு தங்கிருந்து வேலை செய்வதற்கு மருத்துவ விசயம் தெரிந்த பெண் தேவை
தொடர்புகளுக்கு - 0761005277

## சேவைகள்

உங்கள் அடகு நகைகளை மீட்க உதவுவோம். பழைய நகைகள் கூடிய விலையில் வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 021 222 2552

பெண்களுக்கான திருமண வைபவ சாறி பிளவுஸ்களுக்கு ஆரிவேர்க் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 077 332 1937, 076 610 9770

பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும், தகுந்த ஆவணங்களுடன் வருகை தரவும்.
தொடர்புகளுக்கு:- 076 804 6048
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி

Laptop உதிரிப்பாகங்களை பெற்றுகொள்ளலாம் பாவித்த Laptop வாங்கப்படும், விற்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 914 7472

கோயில் மாலை, கல்யாணமாலை, கல்யாண மாலை நச்சுரல், ஆண்டாள் மாலை, கொண்டை மாலை, மல்லிகை சரம், சடை நாகம் கொழும்பு மல்லிகை மாலை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு -
077 210 0014, 076 834 4381

அனைத்து விதமான இசைக்கருவிகளும் மிகக்குறைந்த விலையில் வாங்க மற்றும் பழுது பார்க்க.
தொடர்புகளுக்கு - 021 222 4242
077 556 3030

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு 077 43 22836

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பிரதான வீதிக்கு அண்மையில் 2.5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பு 18 லட்சம். தொடர்புகளுக்கு 070 4317660

1.கொக்குவில் சம்பியன் வீதியின் முகப்பாக 6.5 பரப்பு காணி விற்பனைக்கு, பிரித்தும் கொடுக்கப்படும்.
2.மாம்பழம் சந்திக்கு 400 மீற்றர் தூரத்தில் கலந்து குளம் வீதியின் முகப்பாக 13/4பரப்பு காணி விற்பனைக்கு.
3.கல்வியங்காடு பருத்தித்துறை வீதியில் 600 மீற்றர் தூரத்தில் 4 பரப்பு காணி விற்பனைக்கு பிரித்தும் கொடுக்கப்படும்.
4.யாழ் நகரப் பகுதியில் பிரதான வீதியின் முகப்பாக 13/4 பரப்புக் காணி விற்பனைக்கு.
5.கல்வியங்காடு பகுதியில் 6 பரப்பு வயல் காணி விற்பனைக்கு உண்டு. மொத்தமாக 24 லட்சம்.
6.கோப்பாயில் பருத்தித்துறை வீதிக்கு 300 மீற்றர் தொலைவில் 5.5 பரப்பு காணி விற்பனைக்கு. ஒரு பரப்பு 15 லட்சம்.
7.இருபாலையில் 3.5 பரப்பு புதிய வீடு விற்பனைக்கு 3 அறைகள் 140 லட்சம்.
தொடர்புகளுக்கு - 076 361 4997

1. செம்மணி வீதியில் நாயன்மார்க்கட்டு கேணியடியில் 18 பரப்பு காணி உண்டு.
2. பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பனை கிழக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி உண்டு.
3. யாழ் பிறவுண் வீதியில் கந்தர்மடசந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணி உண்டு.
4. யாழ் பொஸ்கோ பாட சாலைக்கு அண்மையில் 3 பரப்பு காணியும் வீடும் உண்டு.
5. றக்காலேனில் வீடும் 8 பரப்புக் காணியும் உண்டு.
6. யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்புக் காணி உண்டு.
7.யாழ் பரமேஸ்வரா சந்தி அருகாமை பலாலி வீதியில் 6 பரப்பு காணியும், சுண்டுக்குழி கொழும்புத் துறை வீதியில் வீட்டுடன் 3 பரப்புக் காணியும், கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 6 பரப்பு காணி 14" பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 857 8528

1. கல்வியங்காட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதிக்கு 550மீற்றர் தூரத்தில்.
தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

1.3 பரப்பு காணி விற்பனைக்கு மாம்பழம் சந்திக்கு அருகாமையில் பு9 வீதிக்கு 300 மீற்றர் தொலைவில் ஒரு பரப்பு 30 லட்சம்.

2.கொக்குவில் ஆடியபாதம் வீதியி புத்தம் புதிய வீட்டுடன் 3.5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு 2.8 கோடி.

3.2 3/4 பரப்பு காணி விற்பனைக்கு கல்வியங்காட்டில் 500 மீற்றர் தொலைவில் கல்வியங்காட்டு சந்தி மொத்தமாக 95 லட்சம்.

4.இருபாலையில் மூன்று அறைகளை கொண்ட வீட்டுடன் 3.5 பரப்பு காணிக்குள் வீடு விற்பனைக்கு 1.40 லட்சம்.

5.11/2 பரப்பு புத்தம் புதிய வடக்கு வாசல் வீடு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து சற்று தொலைவில் கொக்குவில் பகுதியில் விற்பனைக்கு 1, 65 லட்சம்.

6.1பரப்பு 5 குழியும் கொண்ட காணி இருபாலையில் விற்பனைக்கு 48 லட்சம்

7.2 1/4 பரப்பில் கடையுடன் 6 அறைகளைக் கொண்ட வீடு இருபாலையில் விற்பனைக்கு உண்டு. பருத்தித்துறை வீதிக்கு முகப்பாக 200 லட்சம்

8.4 1/2 காணிக்குள் மேல் மாடி வீட விற்பனைக்கு 50 மீற்றர் தொலைவில் A9 வீதி 400 லட்சம்

9.நிலாவரையில் 31 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 4.5 லட்சம்

10.ராச வீதிக்கு முகப்பாக பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 25 லட்சம்
தொடர்புக்கு - 076 361 4997

1.தெல்லிப்பளை 2 பரப்பு 8.83 குளி (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையிலிருந்து 200 மீற்றர்

2.வல்வெட்டித்துறை - 15.83 குளி (நெடியகாடு பிள்ளையார் கோயிலுக்கு எதிரே)

3.நுணாவில் - 12 பரப்பு (40 தென்னைகளுடன் வணிகத்திற்கு பொருத்தமான காணி)

4.சாவகச்சேரி 14 லட்சம் 12.53 குளி (வணிகத்திற்கு பொருத்தமான சாவகச்சேரி நகரிற்கு மிக அண்மையாக காணி)

5.நெடுங்குளம் - 1 பரப்பு 4.5 குளி வீட்டுடன் காணி (A9 வீதியிலிருந்து 1 கி.மீ தூரத்தில் குடியிருப்பிற்கு ஏற்ற வீடு)
தொடர்புக்கு - 076 361 4997

வவுனியா நகரில் 10 3/4 பரப்பு மேட்டுக் காணி கொரவப்பொத்தானை பிரதான வீதியில் விற்பனைக்கு ஒரு பரப்பு 1 கோடி 20 லட்சம் 110 அடி வீதிக்கு முகப்பாக உள்ளது வவுனியா நகர மத்தியிலிருந்து 1 கிலோ மீற்றர், விலை பேசித் தீர்மானிக்கலாம்.

## வீடு வாடகைக்கு தேவை

1. கோண்டாவிலில் 8 அறைகள் 3 குளியல் அறைகளுடன் 2 பரப்பு காணியுடன் வீடு வாடகைக்கு உண்டு. மாதம் 30, 000/= முற்பணம் 3 லட்சம்.

2. கந்தர்மடத்தில் 2 அறைகளுடன் குளியலறை வெளியே அமைந்த வீடு வாடகைக்கு மாத் 15,000/= முற்பணம் 2 லட்சம்.
தொடர்புகளுக்கு - 075 54 7001

1.காலியில் இரண்டு அறைகள் இரண்டு குளியல் அறைகள் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு, 100 மீற்றர் தொலைவில் தெகிவளை வீதி மாத வாடகை 35,000/= முற்பணம் 6 மாதம்

2.கோண்டாவிலில் 8 அறைகள் 3 குளியல் குறைகள் 2 பரப்பு காணியுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு மாதம் 30, 000/= முற்பணம் 3 லட்சம்.

3.கொழும்பு உயர் நீதிமன்றம் அருகாமையில் 3 அறைகளை கொண்ட இரட்டை வீடு மாத வாடகை 45,000/= முற்பணம் 6 மாதம்
தொடர்புகளுக்கு - 076 361 4997

## பழுது பார்த்து கொடுக்கப்படும்

சகல வகையான குளிர்சாதன பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 654 8613

## கல்வி

மிருதங்கம், வயலின், கிட்டார், ஓகன், வாய் பாட்டு கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 022 9400

சகல வகையான இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு - 021 222 4242
077 556 3030

## காணி தேவை

யாழ் நகரில் இருந்து மருதனார் மடத்திற்கு இடைப்பட்டதாக K.K.S வீதியில் வீதியோரத்தை அண்மித்ததாக காணி தேவை.
தொடர்புகளுக்கு - 077 951 4699

## அட்டன் ஓயாவிற்கு செல்லும் கிளை ஆறில் சட்டவிரோதமான மாணிக்கக்கல் அகழ்வு

வட்டவளை,மார்ச் 20

வட்டவளை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட அட்டன் ஓயாவிற்கு செல்லும் கிளை ஆறு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 9 பேரை வட்டவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வட்டவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்த 9 பேரும் கைது செய்யப்பட்டதோடு மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைபற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹற்றன், நோர்வூட் , பொகவந்தலாவ, ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என வட்டவளை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட 9சந்தேக நபர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு எதிர்வரும் 28 ஆம் திகதி ஹற்றன் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜராகுமாறு வட்டவளைப் பொலிஸாரினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர், வங்கி ஆளுநர் ஆகியோரை சந்தித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ!





பங்களாதேஷின் வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் பங்களாதேஷின் வங்கியின் ஆளுநர் ஆகியோரை சந்தித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் பிரதமருடன் ஜீ.எல்.பீரிஸ், அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் குழுவினர் கலந்துகொண்டிருந்தனர்.

பங்களாதேஷிற்கு இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் பங்களாதேஷ் வங்கியின் ஆளுநரை ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், பங்களாதேஷ் நாட்டு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஏ.கே.அப்துல் மோமனுக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சு நேற்று பகல் டாக்கா நகரில் இடம் பெற்றது.

இதன் போது இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு , வணிக மற்றும் முதலீடு ஆகிய துறைகளின் இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்து வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுடன் 50 வருடங்கள் நிறைவுபெறுகின்றன. இந்த உறவை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வது அவசியமானதாகும் என இரு தரப்பு பேச்சிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த காலங்களில் பங்களாதேஷ் நாட்டின் பொருளதார வளர்ச்சி தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவதானம் செலுத்தினார்.

இலங்கையின் முதலீட்டாளர்கள் பலர் பங்களாதேஷில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை இரு நாட்டின் வணிகத் துறையின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது எனவும் குறிப்பிட்டார்.

பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவை மேம்படுத்தும் நோக்கில் ஒன்றிணைந்த ஆலோசனை ஆணைக்குழுவின் செயற்பாடுகளைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் இரு தரப்பு பேச்சின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டது. ஒன்றிணைந்த ஆலோசனை ஆணைக்குழுவில் இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனை

இரத்தினபுரி மாவட்டத்தில் மாணவர்களை இலக்கு வைத்து மருந்தகங்கள் மூலம் போதைப்பொருள் விற்பனை இடம் பெற்று வருவது குறித்து பாதுகாப்பு துறையினர் அவதானத்தை செலுத்தியுள்ளனர்.

திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் போதைப் பொருள் விற்பனை காரணமாக பாடசாலை மாணவர்கள் கிராம தோட்டப்பகுதி இளைஞர்கள் பாதிக்கப்பட்டு வருவதனால் இதனைக் கட்டுப்படுத்த இரத்தினபுரி மாவட்ட போதைப் பொருள் பொலிஸ் சுற்றி வளைப்புப் பிரிவு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் போதையை ஏற்படுத்தவல்ல பொருள்களை விற்பனை செய்து வந்த இத்தகைய மருந்தகங்களில் குறுகிய காலத்தில் உடல், உள ,உயிர் பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவது விசாரணைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது.

போதைப் பொருளுக்கு பதிலாக சந்தேகங்களை ஏற்படுத்தாத மாணவர், இளைஞர்களைக் கவரக்கூடிய குளிசை வகைகளை இவர்கள் பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது இவற்றில் சில கொடிய நோய்களுக்கு பயன்படுத்தும் குளிசைகள் எனவும் வைத்தியர்களின் சிபாரிசு இல்லாமல் விநியோகிக்க முடியாத இந்த உயிராபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய குளிசை வகைகள் கொள்ளை விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1988.01.04 மதம் - இந்து
ஜாதி - N பகுதி நட்சத்திரம் -புனர்பூசம் 4
கி.பா - 08 செவ் - 06 இல்
தகைமை - AL தொழில் - Plumber கட்டார்
எதிர்பார்ப்பு - படித்த மணமகள் தேவை

பிறந்த திகதி - 1989.09.25 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 14 சூரி/செவ் - 11 இல்
தகைமை - B.B.A தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி -1986.06.28 மதம் - இந்து
ஜாதி - P பகுதி நட்சத்திரம் - பூட்டாதி 4
கி.பா - 13 செவ் - 6 இல்
தகைமை - B.sc
தொழில் - Immigration Officer
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1982.02.17 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 25 செவ் - 10 இல்
தகைமை - Accountant தொழில் - UK PR (Company)
எதிர்பார்ப்பு -UK இலங்கை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1987.11.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 21 செவ் - 08 இல்
தகைமை - M.B.B.S
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor விரிவுரையாளர் மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1984.12.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 57 செவ் - 08 இல்
தகைமை - AL
தொழில் - கட்டட மேற்பார்வையாளர்
எதிர்பார்ப்பு - AL படித்த மணமகன் சீதனம் பெரிதாக எதிர் பார்க்கவில்லை.

பிறந்த திகதி - 1986.10.04 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அத்தம் 3
கி.பா - 24 செவ் - 02 இல்
தகைமை - B.B.A.
தொழில் - Bank Assitant Manager
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1990.12.24 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரட்டாதி 2
கி.பா - 18 செவ் - 7 இல்
தகைமை - Computer Diploma தொழில் - Bank Officer
எதிர்பார்ப்பு - அரச சேவை கொழும்பு மணமகள். காரைநகர் விருப்பம் மற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1991.07.15 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 49 செவ் - 09 இல்
தகைமை - B.sc Software Engineer
தொழில் -Software Engineer Company
எதிர்பார்ப்பு - Doctor or Engineer உள்நாடு (UK, Australia) வெளிநாடு PR மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1994.09.18 மதம் - இந்து
ஜாதி - P பகுதி நட்சத்திரம் - சதயம்
கி.பா - 29 செவ் - 8 இல்
தகைமை - B.B.M
தொழில் - Management Assistant
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1987.05.21 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் நட்சத்திரம் -மிருகசீரிடம் 4
கி.பா - 07 சூரி/செவ் - 12 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1988.05.28 மதம் - இந்து
ஜாதி - P பெண் நட்சத்திரம் - சித்திரை 2
கி.பா - 72 செவ்/சூரி - 01 இல்
தகைமை - B.B.A
தொழில் - Company Manager
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.06.24 மதம் - இந்து
ஜாதி - குருகுலம் நட்சத்திரம் - புனர்பூசம் 1
கி.பா - 28 சூரி/செவ் - 12 இல்
தகைமை - B.sc M.sc தொழில் - பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு - Australia, Canada அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1986.02.17 மதம் - இந்து
ஜாதி - P பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 22 சூரி/செவ் - 6இல்
தகைமை - B.Com
தொழில் - Development assistant
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1990.09.13 மதம் - இந்து
ஜாதி - P பகுதி நட்சத்திரம் - திருவாதிரை 2
கி.பா - 13 சூரி/செவ்- 9 இல்
தகைமை - B.sc M.sc
தொழில் - விஞ்ஞான ஆய்வாளர்
எதிர்பார்ப்பு - Doctor, Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1988.11.12 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 30 செவ் - 6 இல்
தகைமை - M.B.B.S
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 34 வயது விவாகாரத்து பெற்ற ஆயிலிய நட்சத்திர 7 இல் செவ்வாய் உள்ள இந்து வேளாளர் மணமகளுக்கு இலங்கையில் மணமகனை தேடுகிறோம்.

கனடாவில் வாழும் 26 வயது கேட்டை நட்சத்திர சூரியன் செவ்வாய் இந்து வேளாளர் மணமகளுக்கு படித்த மணமகனை தேடுகிறோம்.

**தொடர்புகளுக்கு - 076 339 8819 001416661855**

## மணமகன், மணமகள் தேவை

பிறந்த திகதி - 17.12.1993, மதம் - இந்து V, நட்சத்திரம் - திருகோணம், கி.பா - 18, தகைமை - M.B.B.S. தொழில் - Doctor Australia. எதிர்பார்ப்பு - Doctor, Engineer ஆஸ்திரேலியா மணமகன்.

பிறந்த திகதி - 22.06.1986, மதம் - இந்து V, நட்சத்திரம் - மூலம் 2, கி.பா - 06, செவ் - 7இல் தகைமை - M.B.A தொழில் - UK Company Colombo, எதிர்பார்ப்பு - அரச சேவை கொழும்பில் வேலை மணமகன் தேவை. விவாகரத்தானவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

பிறந்த திகதி - 10.08.1981, மதம் - இந்து V, நட்சத்திரம் - கேட்டை, கி.பா - 44, செவ் - 12, தொழில் - கடை உரிமையாளர்.

பிறந்த திகதி - 1991, மதம் - இந்து, நட்சத்திரம் - அனுசம், கி.பா - 27, செவ்/சூரி - 2இல் தொழில் - B.com Accountant

**தொடர்புகளுக்கு - 077 197 1667**

# யாழில் பூப்புனித நீராட்டுவிழாவில் அன்பளிப்பைச் சுருட்டிய சிறுவன்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.21

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டுவிழாவிற்கு வந்தவர்கள் வழங்கிய அன்பளிப்பு பணத்தை சிறுவன் ஒருவன் சுருட்டிக்கொண்டு தப்பிச் சென்றான் எனக் கூறப்படுகின்றது.

கொக்குவில் பகுதியை சேர்ந்தவர்கள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் புற நகர்ப் பகுதியில் உள்ள ஓர் மண்டபத்தை பதிவு செய்து அங்கே பூப்புனித நீராட்டுவிழா நிகழ்வுகளை மேற்கொண்டனர்.

நிகழ்விற்குச் சென்ற உறவுகள் செல்வியை ஆசீர்வதித்து வழங்கிய அன்பளிப்புப் பணத்தினை மேடையின் அருகே ஓர் பையில் பாதுகாத்தனர். இதனை அவதானித்த சிறுவன் ஒருவன் மண்டபத்தில் இருந்த கூட்டத்தை பயன்படுத்தி அன்பளிப்பு பணத்தை சுருட்டிச் சென்றுள்ளான்.

அன்பளிப்பாக வழங்கப்பட்ட பணம் என்ற வகையில் களவு போன பணம் எவ்வளவு எனச் சரியாக கணிப்பிட முடியாத போதும் சுமார் ஒரு லட்சம் ரூபாவை தாண்டிய தொலையாக அது இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமைகன் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் விடயம் 08 இன் கீழான வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான திட்டமிடல் பற்றி நேற்றுமுன் தினம்நடைபெற்றபொது விவாத்தில் இணைய வழியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரின் உரை வருமாறு:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து இந்த விடயத்தை நான் இங்கு சமர்ப்பிக்கின்றேன். ஒரு மக்கள் கூட்டம் தமது வாழ்வின் பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையைப் பெற்றிட நியாயமான எந்தவொரு நடவ டிக்கையையும் மேற்கொள்ள உரித்துடைய வர்கள் என வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான செயற்றிட்டம் வெளிப்படுத்துகின்றது.

இலங்கை அரசால் இழைக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் மத்தியில், தமிழ்த் தேசமானது தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்காகப் போராடி வருகின்றது. இலங்கை அரசானது வன்முறையைக் கட்டவிழ்த்தபோது, அதிலிருந்து தம்மைப் பாதுகாக்கவே தமிழர்களும் ஆயுதவழிப் போராட்டத்தைக் கையிலெடுக்க நேர்ந்தது.

2002ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் ஒரு போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இரண்டு தரப்பினருக் கும் போர் முனையில் ஏற்பட்ட படைவலுச் சமநிலையே, இதற்கு அடிப்படை காரணமாகும்.


தமிழர் தாயகத்தின் ஏறத்தாழ 75 வீதமான நிலப்பரப்பானது தமிழீழ விடுத லைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் ஆளுகைக்குள்ளும் இருந்த அப்போதைய களநிலை யதார்த் தத்தின் அடிப்படையில், ஈழத் தமிழரின் தேச அந்தஸ்தும் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்பட்டு, ஆகக் குறைந்தது இந்த அரசின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு ஒரு சமஷ்டி ஆட்சி முறைமை உருவாகுமென்றே எதிர்ப்பார்க்கப்பட்டது. இதன் மூலமாக ஈற்றில் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய ஏதுநிலை ஏற்பட்டிருக்கும்.

ஆனால், நடைமுறையில் நிகழ்த்தப் பட்டதோ முற்றிலும் வேறுபட்ட ஒரு நிகழ்வே. இந்த அரசானது, சர்வதேசத்தின் பல் வேறு தரப்புகளின் ஆதரவுடன், இராணுவ நடவடிக்கையையே தமது தீர்வாக முன் வைத்தது.

அந்த இராணுவ நடவடிக்கையினுடைய விளைவுகளே, இலங்கை அரசு தமிழர்கள் மீது இனப்படுகொலையை மேற்கொண்டது என்ற குற்றச்சாட்டை தமி ழர்கள் முன்வைக்கும் நிலையை உருவாக்கியது.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை அங்கீகரிக்காமல் பேச்சளவில் மட்டும் கையாளும் வரை சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற அனைத்து மக்களும் தொடர்ந்தும் பாதிக்கப்படுபவர்களாகவே இருப்பார்கள் என்பதை இங்கு வெளிப்படுத்திக் கொள்கின்றேன் - என்றார்.

# இம்ரான் கானுக்கும் கொரோனா



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார் என்று பிரதமரின் சிறப்பு உதவியாளர் ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இம்ரான் கான், அண்மையில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்தார். அதே வேளை, அண்மையில் சீனாவின் சீனோபார்ம் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்திக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.













# விபத்தில் பூசகர் படுகாயம்

யாழ்ப்பாணம், மார்ச். 21

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த முதியவரை இராணுவத்தின ரின் ட்ரக் வண்டி மோதியதில் படுகாயமடைந்த பூசகர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ் நகரில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவரை அதே திசையில் பயணித்த ட்ரக்கே யாழ்.ஆஸ்பத்திரியின் பின்னால் சென்று மோதியது. இந்த விபத்தில் படுகாயமடைந்த பொன்னாலையைச் சேர்ந்த 75 வயதுடைய பூசகர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -076 443 8622

தொழினுட்பப் பிரிவு
விஸ்டம்
A/L 2023
2021 Day

பொறியியற் தொழினுட்பவியல்
K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
P.சண்முகதாசன் (Rtd Instructor Buildings - SLTES)
R.சிவரூபன் NCECP , NCT (Electrical & Electronic)
R.நிரூஜன் B.Sc
M.சுதாகரன் NDT , B.Ed
P.கிருபாகரன் NDT (Const Tech)
P.கணேஸ் NDT Automobile , (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
P.விமலநாதன் B.Sc
R.நிரூஜன் B.Sc
A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
M.விஸ்னுதேவன் B.Sc (Agri), PGDE
P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்
S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்
P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்
S.ஸ்ரீகிருஸ்ணா BA (Hons) , PGDE (Merit)

கணிதம் (7)
S.தர்சன் B.Sc (Hons) , PGDE (Merit)
M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை
S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்
S.கருணாகரன் NDT , B.Ed

077 248 7774
076 552 9093
"நாம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

காணி விற்பனைக்கு
மன்னார் பரப்பு கடந்தானில் 6 அடி கிரவல் மண் உள்ள 600 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு
076 967 7845

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில் #10
Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா !!!
Australian Skilled – Recognised Graduate Visa for Junior Engineers
(Graduated within 2 years)
18 Months to work and gain experience in Australia.
தகைமைகள்:
- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
- BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya,
- University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் – IELTS average 6

தொடர்புக்கு:- HOTLINE: : 0766228891
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

ST.ANTONY'S COMPUTER
acer DELL hp
2 YEARS WARRANTY
மடிக்கணினிகள் (Laptops)
65,000 ரூபா முதல்

189, K.K.S Road, Jaffna Town.
021 222 4865
075 069 8608

Online. Cleaning & Caring (PVT) LTD

- உங்கள் வீடுகள், கடைத் தொகுதிகள் மற்றும் நிறுவனங்கள், அலுவலக பணியிடங்களுக்கு சுத்திகரிப்புச் சேவை தேவைப்படுபவர்களும்.
- வீட்டுப் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு வேலைகளுக்கு ஆட்கள் தேவைப்படுபவர் களும் தொடர்புகொள்ளவும்.
- வீட்டு பணியாட்கள் தேவை. 20 - 55 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 435 0737

Anna EXPRESS Courier Services

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |


தீபம் கல்வி நிலையம்
யாழ் மாவட்டத்தில் தனித்துவமான முன்னணி பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
A/L 2023 கலை, வர்த்தகப்பிரிவு

வர்த்தகப்பிரிவு
- கணக்கீடு — K.பாலகஜன் M.com (Acc.Spl.)
- பொருளியல் — V.ஜெகதீஸ் BA (Hons) Eco. Spl.
- வணிகம் — S.K.பாலசபேஷ் B.Com (HNDA)

கலைப்பிரிவு
- தமிழ் — இ.இ. வசீகரன் B.A.
- புவியியல் — K.T.ஜெராட் B.A. (Hons) Geo.Spl.
- அரசியல் — R. பாலகாந்தன்
- கிறிஸ்தவ நாகரீகம் — J.சரோன் B.A (Hons) Chri.Civil Spl.
- வரலாறு — K.கலைச்சந்திரன் B.A.(Hons), PGDE
- ICT — N.நிரோஜன் B.Sc in Computer Science

தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்
A/L 2023 அனுமதிகள் வழங்கப்படுகின்றன
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 7781 நிர்வாகி

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2021 இல் வெளியிடப்பெற்றது.